கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

15.02.2015 - (15 மாசி, 2015 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 05, கதிர் - 106 16 பக்கங்கள் ரூபா: 25.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /22 / NEWS / 2015

# ஞான ஒளி

ඥාන ඔලි GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி - 05







தவக்காலம் தவறுகளை திருத்தும் காலம்

18 – 02 – 2015



விபூதிப் புதன்



இனிமையான இல்வாழ்விற்கு

# உலகமயமாக்கப்பட்டுள்ள புறக்கணிப்பைக் களைவதற்கு முயற்சிப்போம்

## திருத்தந்தையின் தவக்காலச் செய்தி

திருஅவை, சிறப்பாக நம் பங்குத்தளங்களும், நம் சமூகங்களும் பிரசன்னமாக இருக்கும் அனைத்து இடங்களும் புறக்கணிப்புக் கடலின் மத்தியில் கருணையின் தீவுகளாக மாற வேண்டுமென்று தான் விரும்புவதாகத் தெரிவித்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

இம்மாதம் 18ஆம் திகதி தொடங்கும் தவக்காலத்திற்கென இச்செய்வாயன்று வெளியிட்டுள்ள செய்தியில் இவ்வாறு கூறியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், உலகமயமாக்கப்பட்டுள்ள புறக்கணிப்பு பற்றி இச்செய்தியில் தான் பேச விரும்புவதாகத் தெரிவித்துள்ளார்.

நமக்கு அடுத்திருப்பவரையும், இறைவனையும் புறக்கணித்து வாழ்வது கிறிஸ்தவர்களாகிய நமக்கு உண்மையான சோதனையாக உள்ளது என்றும், தம் மகனை அனுப்பும் அளவுக்கு இவ்வுலகை அன்புகூரும் இறைவன் இவ்வுலகைப் புறக்கணிப்பதில்லை என்றும் கூறியுள்ளார். இறைவனின் மக்களாகிய நாம் பிறரைப் புறக்கணித்து, நமக்குள்ளே முடங்கி தன்னலவாதிகளாக இருப்பதிலிருந்து வெளிவருதற்கு அகவாழ்வில் புதுப்பித்தல் அவசியம். இதற்கு உதவியாக மூன்று விவிலியப் பகுதிகளைப் பரிந்துரைக்க விரும்புவதாக அச்செய்தியில் கூறியுள்ளார் திருத்தந்தை.



ஓர் உறுப்பு துன்புற்றால் அதனுடன் மற்ற எல்லா உறுப்புகளும் சேர்ந்து துன்புறும் (1 கொரி 12, 26) உனது சகோதரன் எங்கே? (தொ.நூ 4,9) உங்கள் உள்ளங்களை உறுதிப்படுத்துங்கள் (யாக் 5,8) ஆகிய மூன்று விவிலியப் பகுதிகளின் அடிப்படையில் தனது சிந்தனைகளையும் பரிந்துரைகளையும் முன்வைத்தார்

தொடர்ச்சி 15ம் பக்கம் ➡

## எமது தலைமை ஆயர் பேசுகிறார்



*அன்புக்குரிய சகோதரர் சகோதரிகளே,*

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் இலங்கை விஜயம் மகத்தான வெற்றிகரமாக அமைந்தமைக்காக இறைவன், அவர் ஒருவரே, போற்றப்படக்கடவாராக! உண்மையிலேயே இது எமது மந்தையாம் திருச்சபைக்கும், ஏன், இலங்கை மக்கள் அனைவருக்குமே மிகப் பெரும் ஆசீர்வாதமாக அமைந்திருந்தது. அவர் எமது மண்ணில் காலடி எடுத்து வைத்த வேளை முதல், அவர் இங்கிருந்து புறப்பட்டுச் சென்ற நேரம் வரை மிகப் பெரும் மகிழ்ச்சி, அன்பு, பெருமதிப்பு முதலிய உணர்வலைகள் இந்நாட்டின் கத்தோலிக்கர் அல்லாத மக்கள் மத்தியிலும் வெளிப்பட்டன.. அவர் மக்களிடம் காட்டிய நெருக்கம், அவரது மகிழ்ச்சி நிறைந்த புன்புறுவல், எளிமையான வழிமுறைகள், தாராளம் மிக்க இதயம், இறைவனில் அவர் கொண்டிருந்த மகத்தான நம்பிக்கையின் வெளிப்பாடு ஆகியவை நம்மை மின்னலாகத் தொட்டது எனலாம். அதுபோலவே எமது மக்களின் புன்முறுவல் பூத்த முகங்கள், அன்பு, அவருக்கு நாம் அளித்த விசுவாசம், அவர்கள் அவரை வரவேற்ற விதம் ஆகியவை அவரைத் தொடவே செய்தன.

தொடர்ச்சி 08ம் பக்கம் ➡

## பிறரன்புப் பணிக்கே தவக்காலம்



“ஏழைகள், மற்றும் சத்துணவின்றி வாடும் குழந்தைகளுக்கு உணவு வழங்கும் நோக்குடன் ஒவ்வொருவரும் உண்ணா நோன்பை மேற்கொள்ளுங்கள்.

நான் பசியாயிருந்தேன், நீங்கள் எனக்கு உணவளித்தீர்கள்” என இயேசு கூறிய வார்த்தைகளை உண்மையாக்க வேண்டுமெனில், நாம் நோன்பிருந்து ஏழைகளுக்கு உணவு வழங்கவேண்டும். திருநீற்றுப் புதன் என்பது செபிப்பதற்கும், நோன்பிருப்பதற்கும், பிறரன்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் இறைவன் நமக்கு விடுக்கும் அழைப்பு. ஏழைச் சிறார்களுக்கு உணவூட்டுதல் இந்த தவக்காலத்தோடு நின்றுபோகாமல், ஆண்டு முழுவதும் தொடரப்பட வேண்டும்” என்றார். ~ பிலிப்பீன்ஸ் கர்தினால் தாக்லே ~

## வேர்பும் (VERBUM) T.V திறப்பு விழா



கடந்த மாதம் 30ஆம் திகதி இலங்கையின் கத்தோலிக்கத் தொலைக்காட்சியின் அங்குரார்ப்பண வைபவம் பேராயர் இல்ல கேட்போர் கூடத்தில் இனிதே இடம் பெற்றது.

தற்போது பியோ T.V (PEO TV 93) மற்றும் டயலொக் T.V (DIOLOG TV 83) ஊடாக ஒளிபரப்பப்படுகிறது. அதன் உரிமையாளரான திரு மிலான் டி சில்வா அவர்களும் பிரமுகர்களும், கலந்து கொண்டனர். அன்றைய தினம் கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் ரஞ்சித் ஆண்டகை சிறு வழிபாட்டை நடாத்தி இந்நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

தகவல் மற்றும் படம் : அசேல தசநாயக்க

## வாழ்த்துகிறோம்



மேதகு ஆயர் மெக்ஸ்வல் சில்வா ஆண்டகை



மேதகு ஆயர் இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை

கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர்கள், மேதகு இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை, மற்றும் மேதகு மெக்ஸ்வல் சில்வா ஆண்டகை ஆகியோர், தமது ஆயர் திருநிலைப்படுத்தலின் ஆண்டு நிறைவைக் 11.02.2015 அன்று கொண்டாடினார்கள். இவர்களின் பணிவாழ்வு மேலும் சிறப்பு செபத்தினூடாக ஞாள ஒளி வாழ்த்துகிறது.

## திருத்தந்தை இலங்கை மக்களுக்கு தமிழ் மொழியில் ஆசி

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தனது உத்தியோகப்பூர்வ இலங்கைக்கான மறைத்தூதுப் பணியை நிறைவு செய்து கடந்த மாதம் 15ஆம் திகதி கட்டுநாயக்கா விமான நிலையம் ஊடாக பிலிப்பைன்ஸ் நோக்கிப் பயணமானார்.

தொடர்ச்சி 15ம் பக்கம்

## சிறுவர் தினம் – 2015.03.07



கொழும்பு உயர் மறைமாவட்ட மறைக்கல்வி அப்போஸ்தலிக்கப் பணியகத்தினால் வருடந்தோறும் நடாத்தப்பட்டுவரும் சிறுவர் தினமானது இம்முறையும் தேவத்தை பெசிலிக்கா பேராலயத்தில் பங்குனி மாதம் 7ம் திகதி சனிக்கிழமை அன்று நடாத்தப்படவுள்ளது.

இவ்விழாவானது காலை 8.00 மணிக்கு திருச்-செபமாலையுடன் ஆரம்பமாகும். இவ்விழாவானது கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை அவர்களின் தலைமையில் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது. கொழும்பு வாழ் கத்தோலிக்க பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள் மறைப்பாடசாலை பொறுப்பாளர்கள் மறைப்பணியாளர்கள் இதனை கருத்திற் கொண்டு இவ்விழாவினை சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

கொழும்பு உயர் மறைமாவட்ட
மறைக்கல்வி அப்போஸ்தலிக்கப் பணியகம்
தமிழ்ப்பகுதி பொறுப்பாளர்

**கடவுளோடு ஒப்புரவாகுங்கள். இதுவே தகுந்த காலம் (2 கொரி 5:20)**

# வயோதிபர் தினம்



கட்டுகஸ்தொட்ட திரு இருதய நாதர் ஆலயத்தில் வருடா வருடம் அருட்தந்தை மைக்கல் சந்தானம் OSB, பங்குத் தந்தையினால் நடாத்தப்படும் முதியோர் தினம் இம்முறையும், திருப்பலியுடன் ஆரம்பித்து, சிற்றுண்டிகள் வழங்கப்பட்டு, J.C.Y.O யினரின் இசை நிகழ்ச்சியுடன், முதியோர்களை மகிழ்வித்து அருட்தந்தை மைக்கல் சந்தானம் சிறு பரிசுகளும் வழங்கி மகிழ்வித்தார்.

**தகவல் : எ. றொபட் டெனியல்,**
**கட்டுகஸ்தொட்ட திரு இருதய நாதர் பங்கு**



## அரசாங்க கத்தோலிக்க ஆசிரியர்களுக்கான தவக்கால திருயாத்திரை [28.02.2015]

அனைத்து கத்தோலிக்க ஆசிரியர்களும் தவக்கால திருயாத்திரையில் கலந்து பயன்பெறுமாறு அழைக்கின்றோம். மேலதிக விபரங்களுக்கு

**அருட்தந்தை உதயதாஸ்**
**தொ.பே.இல 0777448775**

## வரலாற்று சிறப்புமிக்க வஹாக்கோட்டை புனித அந்தோனியார் தேசிய திருத்தலம்

## தபசு கால திருயாத்திரை 2015

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த வஹாக்-கோட்டை திருத்தல கல்வாரி மலைக்கு தபசு கால திருயாத்திரை செய்து ஆண்டவரின் அன்பை உணர்ந்தறிய அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**ஆசீர்வாதப்பர் சபைக் குருக்கள்**
**புனித அந்தோனியார் தேசிய திருத்தலம் வஹாக்கோட்டை**
**தொ.பே. இல : 0662289210, 0662289371**

## திறந்தவெளி சிலுவைப்பாதை

புனித யோசேவ்வாஸ் மன்றத்தினால் வருடந்தோறும் நடாத்தப்படும் திறந்தவெளி சிலுவைப்பாதையானது இம்மாதம் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை புனித வியாகுல மாதா ஆலயத்தில் இருந்து பிற்பகல் 3.00 மணிக்கு ஆரம்பமாகி, புனித லூசியால் பேராலயத்தில், கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் மேதகு இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகையின் தலைமையில் கூட்டுத்திருப்பலியுடன் முடிவடையும்.

**தகவல் : அருட்தந்தை உதயதாஸ் அடிகள்**

# புனித செபஸ்தியார் திருவிழா





நீர்கொழும்பு மனச்சேனை பங்கின் அடிக்கண்டி சிற்றாலயத்தில் புனித செபஸ்தியார் திருவிழா கடந்த மாதம் 25ம் திகதி கொண்டாடப்பட்டது. அன்றைய சிறப்புத் திருப்பலி அருட்தந்தை ஜேந்த விக்கிரமசிங்க அடிகளாருடன் பங்குத்தந்தை அமல கோமஸ் அடிகளாரும் திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர். இவற்றைப் படத்தில் காணலாம்.

**தகவல் மற்றும் படங்கள் : திரு. கல்தேரா**

## வத்தளை மறைவட்டம் மறைப்பாடசாலை, திருப்பலி விபரம்

| | ஆலயம் | மறைப்பாடசாலை | ஞா. திருப்பலி |
|---|---|---|---|
| 1. | வத்தளை புனித அன்னம்மாள் ஆலயம் | காலை 7.30 | பி.ப 4.30 |
| 2. | நாயக்கக்கந்தை காணிக்கை மாதா ஆலயம் | காலை 9.00 | காலை 11.30 |
| 3. | மாபொல புனித மரியாள் ஆலயம் | காலை 9.00 | காலை 10.30 |
| 4. | பள்ளியாவத்தை கார்மேல் அன்னை ஆலயம் | காலை 9.30 | காலை 11.00 |
| 5. | கெரவலப்பிட்டிய புனித சூசையப்பர் ஆலயம் | காலை 9.00 | காலை 11.30 |
| | | | (முதல் வாரம், 4ம் வாரம்) |

ஒவ்வொரு பங்கைச் சேர்ந்த மக்களும், பாடசாலை செல்லும் பிள்ளைகளை மறைப்பாடசாலைக்கும், குடும்பமாக திருப்பலிக்கும் சென்று ஆன்மீக வாழ்வில் அக்கறைக் காட்டும்படியாக கேட்டுக் கொள்கின்றேன். மேலும் பெற்றோர்களும் / மறையாசிரியர்களும் பங்கு தந்தைக்கும் ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். நன்றி

**தகவல் : அருட்தந்தை உதயதாஸ் வத்தளை மறைவட்ட மறைக்கல்வி இயக்குனர்**




கொழும்பு கொட்டாஞ்சேனை புனித அசீர்வாதப்பர் கல்லூரி தனது 150வது ஆண்டு நிறைவையொட்டி 07.02.2015 அன்று பாதநடை (walk) ஒன்றை நடாத்தியது. அதில் கல்லூரி அதிபர், அருட்சகோதரர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் கலந்து சிறப்பித்தனர். அன்றைய நிகழ்வின் முதற்கட்டமாக கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் மேதகு இம்மானுவேல் ஆண்டகை அவர்கள் ஆசீர்வதித்து ஆரம்பித்து வைப்பதை படத்தில் காணலாம்.

**தகவல் மற்றும் படங்கள் பீற்றர் டீ குரூஸ்**



வத்தளை புனித அன்னம்மாள் ஆலய தமிழ் பாடகர் குழாம் உறுப்பினர்களுக்கும், ஆலோசகர்-களுக்குமான ஒன்றுகூடல் இம்மாதம் முதலாம் திகதி வத்தளை றோ.க. தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்றபோது அந்நிகழ்வில் சிறப்புரை ஆற்றிய அப்பாடசாலை அதிபர் திரு. கொட்வின் அவர்களுடன், உதவிப்பங்குத்தந்தை அருட்தந்தை உதயதாஸ் அடிகளையும், தலைமை ஆலோசகரும் பாதுகா-வலரும் ஆகிய திரு. யேசுரட்ணம் ஆகியோருடன் பாடகர் குழாம் உறுப்பினர்களும் ஆலோசகர்களும்

**தகவல் : அருட்தந்தை உதயதாஸ்**

ஞான ஒளி
GNANA OLI

கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல 0112695984,0114899611 பெக்ஸ் 0112692586,
மின்னஞ்சல் முகவரி cgnanaoli@yahoo.com
15,மாசி மாதம், 2015 ஞாயிற்றுக்கிழமை.

## அன்றாட வாழ்வில் நாம் சந்திக்கும் நிகழ்வுகள் பிரச்சினைகள் அவதூறுகள் அனைத்தையுமே சிலுவைகளாக எண்ணாமல் நம்மை புடமிட இறைவன் நமக்குத்தரும் சந்தர்ப்பங்களாக எண்ணுவோம்.

மீண்டுமாக இறைவனின் இரக்கத்தின் அருளின் காலமான தவக்காலம் ஆரம்பமாக இருக்கிறது. அதுதான் மனந்திரும்புதலின் காலம். அதாவது இறைவனின் அன்பை முழுமையாக பெற்றுக்கொள்ள அழைப்புவிடுக்கும் காலம். இயேசுகிறிஸ்துவின் முதல் போதனையும் “மனந்திரும்புங்கள்” என்பதுதான். விசுவாசத்தில் நாம் எப்பொழுதும் நிலைத்திருந்தால்தான் ஒவ்வொருவருக்குள்ளும் மனந்திரும்புதல் உண்டாகும். மனித வாழ்க்கையானது தினமும் மாறிக்கொண்டேதான் இருக்கும். ஆனால் நாம் சரியான இலக்கை இடத்தை அடையும் வரையில் இறைவன் நம்மை புடமிட்டுக்கொண்டுதான் இருப்பார். இஸ்ராயேல் மக்கள் கானான் நாட்டை அடையும் வரையில் அவர்கள் சோதிக்கப்பட்டார்கள் புடமிடப்பட்டார்கள். பலவேளைகளில் எமக்கேன் இந்த நிலை என்று இறைவனிடமே முறையிட்டார்கள். சோர்ந்து போனார்கள். சிலர் இறந்தும் போனார்கள். கானான் நாட்டை அடையும் பாக்கியம் அவர்களுக்கு கிடைக்கவில்லை. ஆனாலும் பலரை இறைவன் சிறந்த முறையில் வழிநடத்தி கானான் அடையும்படி செய்தார். இதுதான் இறைவனின் இரக்கம் என்பது. எமது வாழ்க்கையில் தினமும் மனந்திரும்புதல் புடமிடுதல் குணமாகுதல் இருக்க வேண்டும். இல்லையேல் எமது வாழ்க்கையும் வனாந்தர வாழ்க்கைப்போல் ஆகிவிடும். ஆகவே இதுவே சிறந்த தருணமும் காலமும் ஆகும். மனம் மாறி விசுவாசத்தில் நிலைத்திருப்போம்.

தவக்காலம் பிறந்ததும் நோன்பும் சிலுவைப் பாதையும் திருயாத்திரைகளும்தான் நமது நினைவிற்கு வரும். உண்மையான சிலுவை என்பது என்ன? இயேசு யூதர்களால் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டார். குற்றம் சுமத்தப்பட்டார். பாடுகள் பல பட்டார். இறுதியில் உயிரையும் விட்டார். ஆனாலும் அவர் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதிலே உறுதியாக இருந்தார். நாமும் நமது வாழ்க்கையில் பலவேளைகளில் தவறாகப்புரிந்து கொள்ளப்படுகின்றோம் குற்றவாளியாக்கப்படுகின்றோம். அவ்வேளை எமது விசுவாசத்தில் தளர்ந்து விடுவோம். ஒருகணம் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாம் மீண்டும் மீண்டும் பாவம் செய்யச்செய்ய இறைவனும் நம்மை அரவணைத்து மன்னிப்பதில்லையா? நமது குற்றங்குறைகளை மறப்பதில்லையா? இறைவன் நம்மை மன்னிக்காமல் புறக்கணித்துவிட்டால் நமது நிலை என்ன? அன்றாட வாழ்வில் நாம் சந்திக்கும் நிகழ்வுகள் பிரச்சினைகள் அவதூறுகள் அனைத்தையுமே சிலுவைகளாக எண்ணாமல் நம்மை புடமிட இறைவன் நமக்குத்தரும் சந்தர்ப்பங்களாக எண்ணுவோம். தங்கமானது நெருப்பில் புடமிடப்பட்டப்பின் பிரகாசிப்பதுபோல் நாமும் பிரகாசிப்போம். அதுபோல் நோன்பையும் கிறிஸ்து ஒரு வாழ்வு நெறியாக வலியுறுத்துகின்றார். அர்ப்பணத்தின் அடையாளமாகவும் இறை வல்லமையைப் பெற ஒரு சிறந்த முயற்சியாகவும் விளங்கும் நோன்பின் உள்தன்மையை உணர்த்தி எந்தளவிற்கு அது மறைவாகவுள்ளதோ அந்தளவிற்குத்தான் வாழ்வுக்கு வளம் தரும் என்ற உண்மையை எடுத்துக் கூறுகிறார். தர்மம் செய்தல் செபித்தல் நோன்பிருத்தல் போன்ற சிறப்பான சமய நெறிகள் அன்று பரிசேயர்களால் கொச்சைப்படுத்தப்பட்டன. காரணம் அன்றிருந்த அரசியல் பொருளாதாரச் சூழலிலே ஒரு பாதுகாப்பின்மையை உணர்ந்தனர். எனவே சமய நெறிகளை தங்கள் பாதுகாப்புக் கவசங்களாக மாற்றி அவற்றை பொதுச் சடங்குகளாக மாற்றினர். ஆனால் இயேசுவே வாழ்வை வளப்படுத்தும் அடிப்படைத்தன்மை கொண்டவை என்ற உண்மையை எடுத்துக்காட்டி அவற்றை வாழ்வின் நெறிகளாக மாற்றினார். மீட்பு என்பது இறைவனிடமிருந்து இலவசமாக கொடுக்கப்படுவது ஒன்று. அதனால்தான் நாம் எத்தனை முறையும் பாவங்கள் செய்தும் மன்னிப்புப் பெறும்போது இயேசுகிறிஸ்துவின் தியாகச் செயலுக்கு மதிப்பின்றி போய்விடுகிறது. ஆக இத்தவக்காலமானது நமக்கு இயேசுவின் தியாகச் செயலை நினைவுப்படுத்தி உண்மையான மனமாற்றத்தை தரும் காலமாக அமையவேண்டும்.

**இறையாசீருடன்**
**ஆசிரியர்**

# புனித பிரான்சிஸ் தவமும், அற்புதமான நாற்பது நாட்களும்

தவக்காலச் சிந்தனை



***புனித பிரான்சிஸ் அசிசியார் “மறு கிறிஸ்து” என அழைக்கப்படுகிறார். ஏனெனில் அவரது வாழ்வு கிறிஸ்துவைப் பிரதிபலிப்பதாகவே அமைந்தது.***

- **இயேசுவைப் போலவே புனித பிரான்சிஸ் அசிசியாரும் 12 அப்போஸ்தலர்களைக் கொண்டிருந்தார்**
- **இயேசுவைப் போல ஐந்து திருக்காயங்களைக் கொடையாகப் பெற்றார்.**
- **இயேசுவைப்போலவே நாற்பது நாட்கள் உண்ணாமலும் குடிக்காமலும் கடும் தவமிருந்தார்**

புனித பிரான்சிஸ் தனது நண்பர்களுக்குச் சொந்தமான பெருஜியா ஏரியின் மத்தியில் அமைந்த சிறிய தீவில் தவக்காலத்தைச் செலவிட கடவுளின் ஆவியால் தூண்டப் பெற்றார்.

விபூதி புதன் மாலை வேளையில் சிறிய படகு ஒன்றில் தனது நண்பனால் ஆளில்லாத அந்தத் தீவிற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அப்போது புனித பிரான்சி-ஸிடம் இரண்டு அப்பங்கள் இருந்தன. புனித பிரான்சிஸ் தனது நண்பரிடம், “புனித வியாழனுக்கு முன் நீ இங்கு வரவேண்டாம். நான் இங்கு இருப்பதை யாருக்கும், தெரியப்படுத்த வேண்டாம்” என மிக கண்டிப்பாகச் சொன்னார். அந்தத் தீவில் தங்குவதற்கு எந்த வீடும் இல்லை, - சிறிய குகைகளும் முட்செடிகளும், புதர்களும், சூழ்ந்திருந்தன. பிரான்சிஸ் செபிப்பதிலும், விண்ணகத்தைப் பற்றி தியானிப்பதிலும் செலவிட்டார். அந்த நாற்பது நாட்களில் அவர் எதையும் குடிக்கவும் இல்லை, உண்ணவுமில்லை. பாதி அப்பத்தை மட்டும் உண்டிருக்கலாம். இதனை புனித வியாழன்று அவரை அழைத்துச் செல்ல வந்த அவரது நண்பர் மீதமிருந்த ஒன்றரை அப்பத் துண்டுகளைக் கண்டதாக உறுதி செய்கிறார்கள். புனித பிரான்சிஸ் தவம் செய்த அந்த இடத்தில் அதன் பிறகு நிறைய புதுமைகள் நடந்ததாகக் கூறப்படுகின்றது.

புனித பிரான்சிஸ் விசுவாசிகளுக்கு எழுதிய முதல் மடலில் இவ்வாறு கூறுகின்றார். சில பரிகாரங்களைக் செய்ய இயன்ற போதிலும், தவமும் பரிகாரமும், செய்யாமல், பாவக்கறையோடு யார், எங்கு, எப்படி மரித்தாலும் சாத்தான் அவனது ஆன்மாவை உடலிலிருந்து வேதனை துன்பங்களுடன் பிரிந்துச் செல்வான்” இதை ஒருவர் அனுபவித்தாலன்றி புரிந்துக்கொள்ள முடியாது. அவர்கள் தாங்கள் கொண்டிருப்பதாக எண்ணிக் கொண்டிருக்கும் திறமை, ஆற்றல், அறிவு மற்றும் ஞானம், (2 நாள் 1:12) அவர்களிடமிருந்து எடுக்கப்பட்டு விடும். மேலும் அவர்கள் தங்கள் பொருட்களை தங்கள் உறவினர் நண்பர்களுக்கு விட்டுச் செல்கின்றனர். அவற்றைத் தங்களுக்குள் பகிர்ந்து கொண்டபின், இதற்கு மேலும் அவன் சேகரித்து வைத்திருக்கலாமே! அவன் ஆன்மா சபிக்கப்படுவதாக என்பர். அவர்களுடைய உடலையோ புழுக்கள் தின்னுகின்றன. இவ்வாறு இவர்கள் தங்கள் உடலையும், ஆன்மாவையும் இந்நிலையற்ற உலகில் இழந்து விடுகின்றார்கள். இவ்விரண்டும், முடிவில்லா வேதனையுற நரகத்திற்குள் செல்லும்.

தவக்காலத்தில் கிறிஸ்தவர்களாகிய நாம், சிலவற்றை விட்டுவிட விரும்புகின்றோம். அல்லது சிலவற்றை கடைப்பிடிக்க முடிவெடுக்கின்றோம். புனித பிரான்சிஸ் தான் எழுதிய பாடுகளில் கட்டளை செபத்தில் நமக்குக் கூறுவது. தவமாக நாம் முன்னெடுப்பதெல்லாம், நமது சொந்த முயற்சியல்ல, கடவுள் நமக்குள்ளிருந்து செயல்படுகிறார் என்பதே. மனமாற்றம் ஒரே நாளில் வந்து விடுவதில்லை. அது படிப்படியாக நிகழ வேண்டும். எனவே தான் பலருடைய தவக்கால முயற்சிகள் தவக்காலத்திற்கும் பின் தலைகீழாகி விடுகின்றன.

புனித பிரான்சிஸ்குவின் தவத்திற்கு முதல் காரணம் அவர் கிறிஸ்துவின் மேல் கொண்ட ஆழமான அன்பு கிறிஸ்துவை அன்பு செய்வோம். அதை பிறரன்புச் செயலாக மாற்றுவோம்.

## தவக்காலத்தில் உறவுகளை சரிசெய்யுங்கள

நம்மோடு நமக்குள்ள உறவு, பிறரோடு உள்ள உறவு ஆண்டவரோடு உள்ள உறவுகளை சரிசெய்ய நம்மை அழைக்கும் காலம் தான் தவக்காலம். உறவுகளை சரிசெய்ய உதவும் மூன்று பணிகள்....

(தொடர்ச்சி 15ம் பக்கம்)

## உண்மை உறைக்கும்

கமிலஸ்



# விபூதிப் புதன்

**பாஸ்காவுக்கு ஆயத்தக் காலம் தான் தவக்காலம் இத்தவக்காலம். விபூதிப் புதனிலிருந்து ஆரம்பமாகிறது. இக்காலம் அருளின் காலம், இரக்கத்தின் காலம், மன்னிப்பின் காலம், கடவுள் நம்மைத் தேடி நம்மை மீட்கும் காலம், கடவுளின் அருளை, கனிவை, இரக்கத்தை, மன்னிப்பை, அன்பை அதிகதிகமாக அனுபவிக்கும் காலம். இயேசுவின் வாழ்வின் முக்கிய நிகழ்வுகளான அவரின் பாடுகள், இறப்பு, உயிர்ப்பு எனும் மறைநிகழ்ச்சிகளைத் தகுதியான உள்ளத்துடன் கொண்டாட நம்மைத் தயாரிக்கும் காலம். நம் ஆன்மீக பயணத்தின் பழையன உதிர்ந்து, பழைய பாவநாட்டங்கள், பாவ வழக்கங்கள், உதிர்ந்து, புத்துயிர் துளிர்க்கும், ஆன்மீக வசந்த காலம் தான் தவக்காலம். புது சிந்தனைகளுடன், புது தெம்புடன், புது பலத்துடன், புது சக்தியுடன், புது வாழ்வை ஆரம்பிக்கும், நோக்குடன் நமக்கு கொடுக்கப்பட்ட காலம் தவக்காலம்.**

## தவக்கால வரலாற்றுப் பின்னணி

ஆதித்திருச்சபையிலே வருடத்திற்கு ஒரு முறை மட்டும்தான் பெரியவர்களுக்கு திருமுழுக்குக் கொடுத்தார்கள். புதுக்கிறிஸ்தவர்கள் தம்மை நாற்பது நாட்கள் தயாரித்து, ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு பெருவிழாவன்று திருமுழுக்குப் பெறுவர். எனவே தவக்காலம் திருமுழுக்குத் தயாரிப்பு காலம்.

ஆதித்திருச்சபையிலே கிறிஸ்தவர்கள் ஆடம்பரமாக கொண்டாடிய ஒரே ஒரு பெருவிழா உயிர்ப்பு பெருவிழாத்தான். அந்த உயிர்ப்பு பெருவிழா அர்த்தத்துடன் கொண்டாட நீண்ட தயாரிப்பு காலம்தான் தவக்காலம். அதனால்தான் பாஸ்கா ஆயத்த காலம் என்கிறார்கள்.

தவக்காலம் பாவப்பரிகார காலம், பெரிய பாவம் செய்தவர்களை கிறிஸ்தவ சமூகத்திற்கு புறம்பாக்கிட அவர்கள் மீண்டும் ஒப்புரவாக விரும்பினால் நாற்பது நாட்கள் கடின தபசு, நோன்பும் ஒரு வேளை உணவு மட்டும் உண்டு பாவப்பரிகாரத்தைத் தேடி கொள்வர். செபமும், தபமும் தான் பாவப்பரிகாரத்தின் அடையாளங்கள். தவக்காலம் கடின தபசுக்காலம், பெரும்பாவிகளுக்கு திருநீற்றுப் புதனன்று பரிகார உடைகொடுத்து தலையில் சாம்பல் பூசி, அவர்கள் கோயிலிருந்து அழைத்துச் சென்று ஊருக்கு வெளியே விட்டு விடுவார்கள். நாற்பது நாட்கள் அவர்களை ஊருக்கு வெளியே இருக்கும்போது, கோயிலுக்கு வருபவர்களைப் பார்த்து தங்களுக்காக கடவுளிடம் வேண்டச் சொல்வார்கள். இவர்கள் நாற்பது நாட்கள் கடின தபசுக்குப் பிறகு உயிர்ப்புப் பெருவிழா இரவு திருவிழிப்பு சடங்கின்போதுதான். சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். தனி மனிதனின் பாவம், சமூகத்தைப் பாதிக்கிறது. தனி மனிதனின் மனந்திரும்புதலுக்கும், சமுதாயத்திலுள்ள அனைவரும் பரிந்து பேச வேண்டுமென்ற சமூக உணர்வை ஏற்படுத்துகின்ற காலம்தான் தவக்காலம்.

## நாற்பது நாட்கள்

தவக்காலம் என்பது நாற்பது நாட்களைக் கொண்டது. இதனை விபூதிப்புதனிலிருந்து பெரிய வெள்ளி வார ஞாயிற்றுக்கிழமைகளைத் தவிர்த்து கணக்கிட்டால் நாற்பது நாட்கள் வரும். ஒவ்வொரு ஞாயிறும் ஆண்டவரின் உயிர்ப்பு ஞாயிறு என்பதால், நாம் ஞாயிற்றுக்கிழமைகளைக் கணக்கிடுவதில்லை. இந்த நாற்பது நாட்களுக்கும் விவிலிய வரலாற்றுப் பின்னணி உண்டு.



- ☆ நோவா காலத்தில் நாற்பது நாட்கள் இரவும், பகலும் மழை பெய்தது.
- ☆ இஸ்ரயேல் மக்கள் பாலைவனத்தில் நாற்பது ஆண்டுகள் பயணம் செய்தனர்.
- ☆ மோயீசன் சீனாய் மலையில் கடவுளின் உடன்படிக்கை பலகையை, பத்துக் கற்பனைகளை வாங்கிக் கொள்ளும் பொருட்டு, நாற்பது நாட்கள் இரவும் பகலும் உண்ணாமலும், தண்ணீர் குடியாமலும் இருந்தார் (வி.ப 2:18, 34, 28)
- ☆ எலியாசு நாற்பது நாட்கள் உண்ணாமலும், குடியாமலும், தொடர்ந்து நடந்து சென்று ஒரேப் என்ற கடவுளின் மலையை அடைந்தார்.
- ☆ எசேக்கியேல் இஸ்ரயேல் மக்களின் சுமையை நாற்பது நாட்கள் சுமந்தார் (எசே 4:6)
- ☆ ஆண்டவர் இயேசு தம் பணிவாழ்வினை தொடங்குமுன் தயாரிப்பாக நாற்பது நாட்கள் தவமிருந்து ஆவியாரால் நிரப்பப்பட்டு வழிநடத்தப்பட்டார். சாத்தானின் சோதனைகளை முறியடித்தார்.
- ☆ இங்கு நாற்பது நாட்கள், நாற்பது ஆண்டுகள் என்பது மணிக்கணக்கையோ நேரத்தையோ குறிப்பது அல்ல, மாறாக இறைவன் வழங்கிய அருளின் காலத்தைக் குறிக்கிறது.

## விபூதி – திருநீறு – சாம்பல்

அடையாளங்களால் பின்னிப்பிணைக்கப்பட்ட மனித வாழ்விலே மாலைகள் அன்பளிப்புகள், திருவிழாக்கள் எல்லாமே அடையாளங்கள்தான். அதேபோல் நம் அருள்வாழ்வும் அடையாளங்களால் அர்த்தமும், ஆழமும் பெறுகிறது.

## விபூதி – வெறுமையின் ஒன்றுமில்லாமையின் அடையாளம்

விவிலியத்தில் விபூதி மனிதனுடைய நிலையற்ற தன்மையையும், குறைநிறையையும் முற்றிலும் சார்புடைய நிலையையும், பாவதாக்குதலுக்கு உள்ளாகக் கூடிய பலவீன நிலைகளையும் குறிக்கின்றது

உ + ம் : ஆபிரகாம் தன்னை ஆண்டவர் முன் புழுதிக்கும், சாம்பலுக்கும், சமமாயிருக்கிற அடியேன் என்று தனது அற்பமான நிலையை ஏற்றுக்கொள்கின்றார். (தொ.நூ 18:27)

மனிதர்களின் மூதுரைகள் சாம்பலை ஒத்த பழமொழிகளே, யோபு 13:21 என்று யோபு மனிதனின் உறுதியற்ற நிலையை பறைசாற்றுகிறார்.

சாம்பலை நான் உணவாகக் கொள்கிறேன் திபா 102:9 என்று தன் வெறுமைநிலையை சங்கீத ஆசிரியர் விளக்குகின்றார்.

தனது நலிந்த நிலையையும், சிறுமை வாழ்வையும் எடுத்துக்காட்டும் சாம்பலை தன்மீது போட்டுக் கொள்கிறான் மனிதன். எஸ்தர் 4:1-4, 2 சாமு 13:9, எசே 28:18)
(மனிதனே! நீ மண்ணாக இருக்கிறாய், மண்ணுக்கு திரும்புவாய் என்ற ..... மனிதரின் இத்தகைய குறைநிலையை உண்மை நிலையாக நினைவுப்படுத்துகிறது.

## விபூதி பாவத்தையும், பலவீனத்தையும் உணர்த்துகிறது

பாவத்தின் விளைவாக மனிதன் வீழ்ச்சியுற்ற கேடுற்ற உருவிழந்த தனது இழிநிலையை தனக்குத்தானே உணர்த்திக் கொள்ளவும், பிறருக்கு அதை அறிக்கையிடவும், சாம்பலை வெளி அடையாளமாகப் பயன்படுத்தினான். மனிதன் “என்னையே நான் கடிந்துக் கொள்கின்றேன், புழுதியிலும், சாம்பலிலும், அமர்ந்து மனம் வருந்துகிறேன்” யோபு 42:6) என தனது வெறுமை நிலையை விளக்குகின்றார். பாவி தன் அகந்தையை அகற்றி பாவ நிலையை உணர்ந்து சாம்பலில் அமர்வதன் மூலம், தலையில் சாம்பலைத் தூவிக் கொள்வதன் மூலம் தனது உண்மை நிலை அனுபவத்தை மற்றவர்களுக்கு அறிக்கையிடுகிறார்கள். பாவத்தையும் பலவீனத்தையும் ஏற்றுக்கொள்கிறார்கள்.

## விபூதி மறுமலர்ச்சி மனமாற்றம் மறுபிறப்பின் அடையாளம்

மனந்திரும்பி நற்செய்தியை நம்புங்கள் என்ற அழைப்புடன் குரு விபூதியை நெற்றியில் பூசுகிறார் மனிதன் அதைப் பெற்றுக்கொள்ளும்போது இறைவனின் நீதித்தீர்ப்பை உணர்த்தவனாக, அவரது இரக்கம், அருட்துணைப் பெற்று, அவரது புதுவாழ்வை, மறுபிறப்பை மறுமலர்ச்சியைப் பெறுகிறான்.

## விபூதி குணமளிப்பதற்கு அடையாளம்

மருத்துவ முறையில் சாணத்தை எரித்துக் கிடைக்கும், சாம்பல் உடலிலுள்ள கெட்ட கிருமிகளை சாகடிக்கும், சக்தி பெற்றிருக்கிறது. தீர்த்தம் கலந்த சாம்பல் இறந்த உடலைத் தொட்டு, தீட்டுப்பட்டவர்கள் மீது தெளிக்கப்பட்டதாக எண் 19:9-13 காண்கிறோம் எனவே தனது உண்மை நிலையில் இறைவனைத் தேடும் மனிதன் பாவ சக்திகளை முறியடிக்கும், சக்தி பெற்று தன்னைத் தூய்மையாக்கி நலமாக்கிக் கொள்கிறார் என்பதை விபூதி தெளிவுபடுத்துகிறது.

## விபூதி புதுவாழ்வுக்கு அடையாளம்

பழைய பொருள்களை சாம்பலில் எரித்த பிறகு அதை மீண்டும் பெற முடியாது. அப்பொருள் முற்றிலும் உயிரிழந்து போய்விடும். அதுபோல ஒப்புரவாகி உயிர்ப்பு ஆண்டவரில் இணையும் எல்லாரிலும், பழையதும் பாவமானதுமான அனைத்தும் மறைந்து முடிய, அவர்கள் புதுப்படைப்பாக உருவானதை விபூதி புதனன்று அறிக்கையிட்டு அனுபவித்து ஆண்டவரின் புதுவாழ்வு வாழ்கிறோம் (2 கொரி 5:17-18).

# நோன்பு

தன்னை அன்பு செய்பவன் தான், பிறரை அன்பு செய்ய முடியும். நோன்பு என்பது ஒரு நேர உணவை மட்டும் விட்டுக் கொடுக்கும் செயல் அல்ல, மாறாக இறைவனுடன், தனித்திருப்பது, செபிப்பது, சிந்தித்தல் மூலம் நம் குறைநிறைகளை அறிந்து, பலம், பலவீனங்களை ஏற்றுக்கொண்டு ஐம்புலன்களையும், அடக்கி, கெட்ட குணங்களை விட்டொழித்து இறை உறவில் மனித உறவில் வளரும் வாழும் மனிதனாக வாழ்வதுதான்.

ஒறுத்தல் முயற்சிகளால் கடவுள் நம் மனதை மேலே எழுப்புகிறார். ஆணவத்தையும், தீய குணங்களையும், அடக்குகிறார். நற்பலன்களையும், அதன் பரிசாக நல்வாழ்வையும் நம் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக கடவுள் வழங்குகின்றார்.

விவிலியத்தில் நோன்பின் பண்புகளையும், பலன்களையும், பார்க்கின்றோம் பல்வேறு நோக்கங்களுக்காக நோன்பு கடைப்பிடிக்கப்பட்டது.

- ✦ **இறந்தோருக்காக :** தங்களுக்கு நெருக்கமானவர்கள் இறந்த போது அந்த பிரிவுத்துயர் தாங்காமல் உணவை வெறுத்தனர். யூதர்கள் (1 சாமு 31:13, 2 சாமு 1:12, 3:35)
- ✦ **நாட்டு நலனுக்காக :** இஸ்ராயேல் மக்கள் பென்யமின் மக்களுடன் போரிட்டு பதினெட்டாயிரம் போர் வீரர்கள் இறந்தபோது ஆண்டவர் திருமுன் நோன்பிருந்தனர். (நீதி 20:26, 1 சாமு 14:24, 1 அர 21:9)
- ✦ **பாவப்பரிகார திருவிழாவின்போது :** இஸ்ராயேல் மக்கள் பாவக்கழுவாய் திருவிழாவின்போது, தங்கள் பாவங்களுக்கு பரிகாரமாக அனைவரும் வேலை செய்யாது நோன்பிருந்தனர். (லேவி 16:29, 23:28, எண் 29:7)
- ✦ **செபத்துடன் நோன்பு :** பலர் தனிப்பட்ட கருத்துக்களுக்காக இறைவனிடம் செபித்தபோது நோன்பிருந்து செபித்தால் அது அதிகப் பயன் தரும் என்று நம்பி நோன்பிருந்தனர் (திபா 25:13, 69:11, 2 சாமு 12:16, மாற்கு 9:29)
- ✦ **கடவுள் பிரசன்னத்தை உணர :** இறைப்பிரசன்னத்தை நம் வாழ்வில் உணர சீனாய் மலையிலும், தானியேலும் நோன்பிருந்து அதன் மூலம் இறைவெளிப்பாட்டை உணர்ந்தார். (வி.ப 34:28, இச 9:9)

**உண்மையான நோன்பு விடுதலைப்பலியே. நாம் அனுசரிக்கும் நோன்பு, உண்மையான உள்ளரங்க மாற்றத்திற்கும், பிறர் நலப்பணிகளுக்கும் நம்மை இட்டுச் செல்ல வேண்டும். (எசா 58:37, எரே 14:12, செக்கரி 7:5, கொலோ 2:23)**





அருட்பணி. அந்திரியாஸ் பர்னாந்து அ.ம.தி

# அருளடையாளங்கள் ஓர் அலசல்

14



# தேவநற்கருணை

## ஞாயிறு நற்கருணைக் கொண்டாட்டம்

நீண்ட இடைவேளைக்குப் பின் சந்திக்கின்றோம். இக்கட்டுரைத் தொடரில் போன முறை (04.01.2015) தேவநற்கருணையைப் பற்றி எழுதியிருந்தேன். இம்முறை எம் "கிறிஸ்தவ வாழ்வனைத்தின் ஊற்றும் உச்சியுமான நற்கருணைப் பலியைப்" பற்றி அலசுவோம். அதிலும் ஞாயிறு தின நற்கருணைக் கொண்டாட்டத்தைப் பற்றி பார்ப்போம். ஞாயிறு தினத்திற்கும் நற்கருணைப் பலி கொண்டாட்டத்திற்கும் இடையேயுள்ள தொடர்பு, ஞாயிறு திருப்பலியின் சிறப்பு போன்றவற்றைப் பார்ப்போம்.

### ஞாயிறு ஆண்டவரின் நாள்

"ஆண்டவர் தோற்றுவித்த வெற்றியின் நாள் இதுவே, இன்று அக்களிப்போம், அகமகிழ்வோம்" (தி.பா. 118:24) கிறிஸ்தவ மரபில் 'ஆண்டவரின் நாள்' என்பது ஞாயிற்றுக்கிழமையைக் குறிக்கின்றது. "ஆண்டவர்" என்ற சொல் புதிய ஏற்பாட்டில் இயேசுக்கிறிஸ்துவைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது. (உரோ 7:25, கலா 6:14, கொலோ 1:3, 2:6, 2தெச 2:1 ) மேலும் இயேசுவை ஆண்டவர் எனக் குறிப்பிடுவது பெரும்பாலும் அவரது மகிமையான உயிர்ப்புக்கு பிறகுதான். எனவே இது இயேசுவின் உயிர்ப்பினை குறிக்கின்றது,

"ஞாயிற்றுக்கிழமை கிறிஸ்துவின் உயிர்ப்பைக் கொணர்ந்த புது படைப்பைக் குறியிட்டுக் காட்டுகின்றது. கிறிஸ்தவ மக்களுக்கு எல்லா நாள்களிலும் முதல் நாள் இதுவே. எல்லா விழாக்களிலும் முதல் விழா நாள் ஆண்டவரின் நாளேயாகும்" எனச் சொல்கிறது திருச்சபையின் மறைக்கல்வி நூல் (எண் 2174)

தூய ஜஸ்டின் முதன்முறையாக கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை காலைக் கதிரவனின் உதயத்திற்கு ஒப்பிடுகிறார். கதிரவனின் பெயராகிய "ஞாயிறு" என்று உரோமைய வழக்கத்திலே அழைக்கப்பட்ட நாளன்றுதான் கிறிஸ்து உயிர்த்தார் என்று அவர் கூறுகின்றார்.

### புதிய ஏற்பாட்டில் ஞாயிறு தினத்தின் முக்கியத்துவம்

இயேசுவின் உயிர்ப்பின் பின்பு இந்நாளிலேயே தம் சீடர்களுக்கு காட்சி கொடுத்தார். (மத் 28:9, லூக் 24:13,36; யோவா 20:19) தூய ஆவியானவர் திருத்தூதர்கள் மீது இறங்கி வந்ததும் இந்நாளிலேயே (தி.பணி 2:1; யோவா 20:22) இயேசு சீடர்களை மீட்பின் தூதர்களாக அனுப்பிய நாளும் இதுவே (யோவா 20:21-23; தி.ப 1:8, 2:4) "ஆண்டவர் தோற்றுவித்த வெற்றியின் நாள் இதுவே, இன்று அக்களிப்போம், அகமகிழ்வோம்" (தி.பா 118:24) இத்திருப்பாடலின் வரிகளுக்கேற்ப, இறைவனே இந்நாளை ஏற்படுத்தினார் என்ற சிந்தனை தொடக்க கால கிறிஸ்தவர்களின் மனதில் பதிந்து இருந்தது. ஆண்டவரின் நாளில் தான் நம்பிக்கை கொண்டோர் அப்பத்தை பிட்டு பகிர்ந்து உண்ண ஒன்று கூடினர். (தி.ப 20:7) தூய பவுல் எருசலேமில் வாழ்வோர்க்காக கலாத்தியர் மற்றும் கொரிந்தியரிடம் இந்நாளில் பணம் திரட்டுவதைக் காண்கின்றோம். (1கொரி 16:1-2)

### சாபாத் – ஞாயிறு ஓய்வுநாள்

இஸ்ரயேல் மக்கள் கடைப்பிடித்த சாபாத்து தான் ஓய்வுநாள் எனப்படுகிறது. இந்நாளை புனித நாளாக கொண்டாட வேண்டுமென்பது பழைய ஏற்பாட்டு படிப்பினையாகும். நாம் தொடக்கநூல் 2:1-3 மற்றும் விடுதலைப் பயணம் 12:14-16 ஆகிய நூல்களில் படிப்பது போல ஓய்வு நாள் படைப்பு மற்றும் விடுதலைப் பின்னணியை உள்ளடக்கியது. இவ்விவிலியப் பகுதிகளில் ஏழாம் நாள் புனிதமாகக் கருதப்படுகின்றது. படைப்புப் பின்னணியில் ஆறு நாட்கள் உலகைப் படைத்த இறைவன் தான் செய்த வேலையில் இருந்து ஓய்வு எடுக்கின்றார். மேலும் இஸ்ரயேல் மக்கள் எகிப்திலிருந்து பெற்ற விடுதலைச் செயலோடும் தொடர்புடையது. இஸ்ரயேல் மக்களின் விடுதலைப் பயணத்தின் வழியாகப் பெற்ற விடுதலையும், சுதந்திரமும் சாபாத் எனும் ஓய்வு நாளைச் சிறப்புடன் கொண்டாடவும், கடைப்பிடிக்கவும் தூண்டுகின்றது.

"ஆண்டவருடைய நாள் இஸ்ரயேல் மக்கள் எகிப்து அடிமை வாழ்விலிருந்து பெற்ற விடுதலையின் நிவைாக்கம்" (திருச்சபை மறைக்கல்வி நூல் 2170) அதாவது, ஓய்வுநாளை தூயதாகக் கடைப்பிடிப்பதில் கருத்தாயிரு. ஆறுநாட்கள் நீ உழைத்து உன் அனைத்து வேலைகளையும் செய்வாய். ஏழாம் நாளோ... உன் கடவுளாகிய ஆண்டவருக்கான ஓய்வு நாள். எனவே அன்று... யாதொரு வேலையும் செய்ய வேண்டாம். (வி.ப 20:8-10)

"எகிப்து நாட்டில் நீ அடிமையாய் இருந்தாய் என்பதையும், உன் கடவுளாகிய ஆண்டவரே தம் வலியகரத்தாலும், ஒங்கிய புயத்தாலும் உன்னை அங்கிருந்து கூட்டி வந்தார் என்பதையும் நினைவில் கொள் (இ.ச 5:12-15)

மனித உழைப்பிற்குப் பின் ஓய்வு எடுப்பது என்பது கடவுளை மகிமைப்படுத்துவது. கடவுளைப் பின்பற்றி ஓய்வு எடுப்பது மனிதரைப் புனிதப்படுத்தும் செயல். சாபாத் நாளின் கொண்டாட்டம் ஞாயிற்றுக்கிழமை கொண்டாட்டமாக மாறுவதற்கு காரணம் இயேசுவே. இவரின் உயிர்ப்பு ஞாயிறு தினத்திற்கு மாண்பு சேர்க்கின்றது. யூத குலத்து இயேசுவின் சீடர்களை வேறுபடுத்தி காட்டுவது ஞாயிறு தினமென்றால் பிழையில்லை. கிறிஸ்தவ மக்களின் வாழ்வுக்கும், வழிபாட்டிற்கும் பொருள் கொடுப்பது ஞாயிறு தின வழிபாடாகிய திருப்பலியே ஆகும்.

### ஞாயிறுக்குச் சிறப்பு நற்கருணைக் கொண்டாட்டமே

ஞாயிறு தினத்தின் இதயமாகவும், உயிரோட்டமாகவும் இருப்பது நற்கருணைக் கொண்டாட்டமே என்கிறார் திருத்தந்தை 2ம் ஜோன் பவுல். இறைமக்களின் வாழ்வுக்கு உயிர்மூச்சாக இருப்பது ஞாயிறு தினத்தில் கொண்டாடப்படும் ஆண்டவருடைய நாளும், நற்கருணைப் பலியும் ஆகும் எனச் சொல்கிறது திருச்சபையின் மறைக்கல்வி நூல். பாஸ்கா ஞாயிறு மாலையில் உயிர்த்த ஆண்டவர் தம் சீடர்களுக்குத் தம்மைக் காண்பித்தார் (யோவா 20:19) அன்று சீடர்கள் பெற்ற அனுபவத்தை இன்று கிறிஸ்தவர்கள் நெருக்கமாக ஞாயிறு வழிபாட்டில் அனுபவிக்கின்றனர்.

அன்று எம்மாவு சீடர்களோடு பயணித்த கிறிஸ்து சீடர்களுக்கு திருநூலை விளங்கப்படுத்தினார். அப்போது மறைநூலைப் புரிந்து கொள்ளுமாறு அவர்களுடைய மனக் கண்களை திறந்தார். அவர்களோடு அவர் பந்தியில் அமர்ந்திருந்த போது அப்பத்தை எடுத்து, கடவுளைப் போற்றி, பிட்டு அவர்களுக்குக் கொடுத்தார். அப்போது அவர்கள் கண்கள் திறந்தன. அவர்களும் அவரை அடையாளம் கண்டு கொண்டார்கள் (லூக் 24:13கக). நற்கருணைக்கும் உயிர்த்த கிறிஸ்து காட்சி அளித்ததற்கும் உள்ள நெருக்கமான தொடர்பை சுட்டிக் காட்டுகிறது.

இன்று நாம் ஞாயிறு தினத்தில் ஒன்று கூடி நற்கருணை விருந்தைக் கொண்டாடுவது வெறும் கடந்த கால நிகழ்வுகளின் நினைவாக்கமல்ல. மாறாக, உயிர்த்த கிறிஸ்து நம்மோடு உயிருடன் பிரசன்னமாக இருக்கின்றார் என்பதை, அதாவது "உலகம் முடியும் வரை எந்நாளும் நான் உங்களோடு இருக்கின்றேன்" (மத் 28:20) என்ற இயேசுவின் உயிரூட்டமுள்ள உடனிருப்பை கொண்டாடுகின்றோம். ஒவ்வொரு ஞாயிறு நற்கருணைக் கொண்டாட்டத்திலும் இயேசுவின் உயிர்ப்பைக் கொண்டாடுகின்றோம். ஞாயிறு தினத்தில் கூடிவரும் நற்கருணைச் சமூகம் திருச்சபையின் இயல்பை இனம் காட்டுகிறது. அதாவது "நற்கருணைக் கொண்டாட்டம் திருச்சபையை உண்டாக்குகிறன்றது. திருச்சபை நற்கருணையை ஏற்படுத்துகின்றது" எனச் சொல்கிறார் திருத்தந்தை 2ம் ஜோன் பவுல். நற்கருணைக் கொண்டாட்டம் திருச்சபைக்கு ஊட்டம் அளிக்கிறது. அதை உருவாக்குகின்றது. நற்கருணைக் கொண்டாட்டத்திலே திருச்சபையை கண்களால் காண முடிகிறது. ஞாயிறு தினத்தில் இயேசுவின் உயிர்ப்பு கொண்டாடப்படும் போது நற்கருணை பலிக்கும் திருச்சபைக்கும் இடையே உள்ள உறவு சிறப்பாக வெளிப்படுகின்றது.

### ஞாயிறு தினத்தின் சிறப்பு

ஒவ்வொரு நாளும் கொண்டாடப்படும் திருப்பலிக்கும் ஞாயிறு கொண்டாடப்படும் திருப்பலிக்கும் வேறுபாடு இல்லை. இருப்பினும் ஞாயிறு திருப்பலிக்கு சில சிறப்புப் பண்புகள் உண்டு. திரளான மக்கள் பங்கேற்கின்றனர். ஞாயிறு திருப்பலி கடமையாக இருக்கின்றது. மேலும் ஞாயிறு திருப்பலி விழாக்கோலம் காண்கின்றது. இவை முக்கியமானவை. மேலும் "ஞாயிறு மகிழ்ச்சியின் நாள்" வாரத்தின் முதல் நாள், ஓய்வுநாள் இயேசு உயிர்த்த நாள். உயிர்த்த இயேசுவைச் சீடர்கள் கண்டு கொண்ட நாள். "பாஸ்கா நாள் மாலை சீடர்கள் உயிர்த்த ஆண்டவரைக் கண்டதால் அகமகிழ்ந்தார்கள். இன்று ஞாயிறு தினக் கொண்டாட்டத்தில் அச்சீடர்களின் மகிழ்ச்சிக்கு திருச்சபை சான்று பகரவேண்டும்" எனச் சொல்கிறார் திருத்தந்தை 6ம் பவுல்.

### ஞாயிறு ஓர் புனித நாள்

எல்லா நாட்களும் மனிதர் கடவுளோடு உறவு கொண்டாலும் ஞாயிறு தினத்தில் சிறப்பான உறவு கொள்ள அழைக்கப்படுகின்றார். "உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்குக் கட்டளையிட்டபடி ஓய்வு நாளைப் புனிதமாகக் கடைப்பிடி" எனச் சொல்கிறது திருவிவிலியம். 'ஞாயிறு புனித நாள்' எனச் சொல்கிறார் தூய பெசில் "ஆண்டவர் இயேசு கிறிஸ்து ஞாயிற்றுக்கிழமை உயிர்த்தெழுந்ததால் அந்நாள் புனித நாளாகக் கொண்டாடப்படுகிறது" எனச் சொல்கிறார் திருத்தந்தை 1ம் இன்னோசென்ட

தொடர்ச்சி 15ம் பக்கம்.

# தவக்கால சிந்தனைக்கு



**எஜமான் :** நான் புண்ணிய யாத்திரை போகிறேன் என் பாவங்கள் போக, புது மனுசனாக மாற, பத்து நாளைக்கு வீட்டைப் பாத்துக்க.

**வேலையாள் :** ஐயா. இருக்கிற இடத்திலேயே நல்லா வாழ்ந்தா புண்ணியம் கிடைக்குமே.

**எஜமான் :** உனக்கு என்னடா தெரியும். நான் போய் வருகிறேன்.

**வேலையாள் :** ஐயா ஒரு உதவி. இந்த நாலு பாகற்காயையும் நீங்க எடுத்துப் போயி புண்ணிய யாத்திரையில் புண்ணிய நதியில் நீங்க குளிக்கும் போது இதையும் முக்கி எடுத்திட்டு வாங்க.

**எஜமான் :** சரி சரி

**எஜமான் :** (பத்து நாட்களுக்குப் பிறகு) என்னடா? பாகற்காய் ரொம்ப கசக்குது

**வேலையாள் :** சாமி அப்படி சொல்லாதீங்க. இது புண்ணிய யாத்திரை உங்களுடன் போயி புண்ணிய நதியில் குளிச்ச பாகற்காய்.

**எஜமான் :** ஏன்டா பாகற்காய்கள் கசக்கும். அது குணம் எப்படிடா மாறும்.

**வேலையாள் :** ஐயா அதுபோலத்தான் நாம சொந்தமாக மாறனும் எத்தனை புண்ணிய யாத்திரை போனாலும், எத்தனை தடவ புண்ணிய நதியில் குளிச்சாலும் நம்ம சுபாவம் நம்மள விட்டுப் போகாது.

இரு கிறிஸ்தவர்கள் திருடர்களாக வாழ்ந்தார்கள் ஒரு நாள் வழக்கம்போல் ஒரு வீட்டில் திருடிவிட்டு ஒரு ஹோட்டலுக்கு சாப்பிட போனார்கள். என்ன சாப்பிடுறீங்க? சர்வர் கேட்க, ஒருத்தர் சொன்னார். "இன்னிக்கு தபசுகால வெள்ளிக்கிழமை மாமிசம் சாப்பிட மாட்டோம், சைவ சாப்பாடு மட்டும் குடு" என்றான். செய்றது திருட்டுத் தொழில் ஆனால் கிறிஸ்தவர்கள் மாதிரி வெளியில் காட்டிக் கொள்வது.



## நீயும் புனிதனாக மாறு



வெற்றியை பத்துவிரல்கள்
கைதட்டி பாராட்டுவதை விட
தோல்வியில் கண்ணீர் துடைக்கும்
ஒரு விரல் புனிதமாது.
நீயும் புனிதனாக இரு

## குடும்பம் பெற்றோர் பிள்ளை உறவு

குடும்பம் அங்கம் 92

*பேராசிரியர் எஸ். ஜே. யோகராசா*
*உளநல ஆலோசகர், களனிப் பல்கலைக்கழகம்.*

# வாழ்வு பெற கிறிஸ்துவைச் சந்தித்தல்

"இயேசுக்கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராய் இருக்கிறார்" என்று எபிரேயர் 13:8ல் கூறப்படுகிறது. இயேசுவின் அன்பு மாறாதது. ஏனையோரின் அன்பு மாறக்கூடியது. உலகத்தில் வாழும் நாம் மாற்றமடையக் கூடியவர்கள். ஆனால் மாறாத நிம்மதியையும், அன்பையும் தேடுகிறோம். என்றுமே மாற்றமடையாதவராகிய கிறிஸ்துவின் அன்பையும், மகிழ்ச்சியையும் நாம் அனுபவித்தவாறு மாற்றமடையும் உலகிலே வாழக் கற்றுக்கொள்ள வேண்டும்.

உயிர்வாழும் கிறிஸ்துவை நாம் ஏன் சந்திக்க வேண்டும்?"திருடுவதற்கும், கொல்வதற்கும் அழிப்பதற்குமன்றித் திருடர் வேறெதற்கும் வருவதில்லை. ஆனால் நான் ஆடுகள் வாழ்வைப் பெறும் பொருட்டு அதுவும் நிறைவாகப் பெறும் பொருட்டு வந்துள்ளேன்" என்று யோவான் 10:10ல் கூறப்படுகிறது.

"வழியும் உண்மையும் வாழ்வும் நானே. என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை" என்று யோவான் 14:6ல் கூறப்படுகிறது. வாழ்வு, உயிர், ஜீவன் என்பது ஒரே பொருள்தரும் சொற்கள். ஒரு மரத்துக்கு உயிர் உண்டு. மிருகத்துக்கு அதைவிட உயிர், ஜீவன் உண்டு. காரணம் ஒரு இடத்திலிருந்து வேறொரு இடத்துக்குச் செல்கின்றது. அதைவிட மனிதனுக்கு உயிர், ஜீவன் உண்டு. அவன் பல கண்டுபிடிப்புக்களைக் கண்டறிகிறான். ஆனால் மனிதன் தனது வாழ்வில் பிரச்சனைகள் வந்தால் அதிலிருந்து வெற்றியடைய முடியாதவாறு தடுமாறுகின்றான். சாதாரண மனிதனைவிட கிறிஸ்தவனுக்கு அதிக உயிர், ஜீவன் தேவை ஏன்?

1. தனது வாழ்வில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு வெற்றியுடன் முகம் கொடுக்க
2. மற்றவர்களது பிரச்சினைகளில் வெற்றியுடன் நடுநிலை வகிக்க
3. தான் வாழும் சமுதாயத்தை நீதி, நேர்மையுள்ள சமுதாயமாகக் கட்டியெழுப்ப ஒரு வல்லமை, பாதுகாப்புணர்வு கிடைக்கிறது.

புனித சின்னப்பர், கிறிஸ்து தரும் உயிர், ஜீவனைப் பெற்று அனுபவித்த ஒருவராவார். அவரது வாழ்வு அன்றைய சமுதாயத்தில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. அவரும், சீலாவும் சிறையில் அடைக்கப்பட்டிருந்தபோது அவரது செயற்பாடு, அவர் அதிக ஜீவனை அனுபவித்த விதம் சிறைக் காவலர் மத்தியில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியது.

கிறிஸ்துநாதர் அதிக ஜீவனை மட்டுமல்ல, பாதுகாப்பையும் தருகிறார். நீரைப்போன்ற பிரச்சினை வந்தாலும் நெருப்பைப் போன்ற பிரச்சினை வந்தாலும் அப்பிரச்சினை எம்மைச் சுட்டெரிக்கவோ, மூழ்கடிக்கவோ முடியாது என்பதே. நான் உன்னோடு இருக்கிறேன் பயப்படாதே என்கிறார்.

ஆகவே அவரிடமிருந்து வல்லமை, ஜீவன், பாதுகாப்பை நாம் பெற்று அனுபவிக்க வேண்டும். அப்போது எமது மனதில் அமைதி, சந்தோசம் வரத் தொடங்கும். நான் தனிமையில் இல்லை. என்னோடு அவரும் இருக்கிறார். இதை அனுபவிக்கும்போது எம்மிடமுள்ள எல்லாவிதமான பயத்திலிருந்தும் விடுபடுகின்றோம்.

இன்று பலருக்கு பல விதமான பயங்கள் உள்ளன. இருளில் செல்லப் பயம், எதிர்காலத்துக்குப் பயம், கடந்த காலத்தை நினைத்துப் பயம் இவற்றிலிருந்து விடுதலை பெற மனிதன் பாதுகாப்பு உணர்வை அனுபவிக்க வேண்டும். சிலர் பயத்திலிருந்து விடுதலை பெற மந்திரநூல், அச்சரக்கூடு ஆகியவற்றில் நம்பிக்கை வைப்பர். நாம் பொருளையல்ல, ஒருவரை வைத்திருக்கின்றோம். உயிர்த்து உயிர்வாழும் ஒருவரை வைத்திருக்கின்றோம். அவரது ஜீவன் வல்லமை, பாதுகாப்பு என்னிடமுண்டு.

*தொடரும்...*

# காதலர் தினம்



ஆசிரியர் தினம், சிறுவர் தினம், வன்முறை எதிர்ப்பு தினம், மகளீர் தினம், இளைஞர் தினம், உலக சுகாதார தினம், சுற்றுச் சூழல் பாதுகாப்புத் தினம், தேசிய ஒருமைப்பாட்டுத் தினம், எனப் பல்வேறு நோக்கத்திற்காக ஆண்டுதோறும் குறிப்பிட்ட நாளில் கொண்டாடி வருகின்றோம். இதன் மூலம் மனிதம், மனிதநேயம், அன்பு, கடமை, சமூக அக்கறை போன்ற நற்பண்புகளை வளர்க்கின்றோம்.

ஆகவே காதலர் தினம், இதற்கு முரணானதாக அமைகிறது. காதலர் தினம் நாகரீகம் என்ற பெயரால் மேலை நாடுகளில் தோன்றிய ஒன்றாகும். காதலர் தினம் என்றால் என்ன? காதல் என்றால் என்ன? இதன் பொருள் அறிந்தா கொண்டாடுகின்றார்கள்? காதலருக்கு உதாரணமாக ரோமியோ - ஜீலியட், அம்பிகாவதி - அமராவதி, லைலா - மஜ்னு, ஷாஜகான் - மும்தாஜ் ஆகியவர்களின் காதல் தெய்வீகமானது, புனிதமானது காரணம் அக அழகை நேசித்து, புற வாழ்க்கை வாழ்ந்தது தான் இதற்கு காரணம். இதுதான் உண்மையான காதல் இப்படிப்பட்ட காதலுக்கு காதலர் தினம் கொண்டாடுவது சரியே. ஆனால் இன்றைய காதலர் தினம் நமது கலாச்சாரத்திற்கு ஏற்புடையதல்ல, நமது பண்பாட்டை மறந்து காதலர் தினம் என்ற பெயரில் இளைஞர்கள் இளம் பெண்கள் கூடி மது அருந்துவது, ஆடிப்பாடி கும்மாளம் இடுவது இரவு நேரங்களில் விருந்துபசாரங்களுக்குச் செல்வது இதுதான் காதலர் தினமா? இவை ஆண், பெண் இருபாலருக்கும் இவை ஏற்றதல்ல. தத்தம் குடும்பப் பாரம்பரியம், தத்தம் இனப் பண்பாடு இவைகளை நினைவிற் கொள்ள வேண்டும். பெற்றோர்கள் இவர்கள் மேல் வைத்துள்ள நம்பிக்கைக்கு பாத்திரமாக நடந்து கொள்வது அவசியமாகும்.

இன்றைய காதல்கள் எல்லாம் திருமணத்தில் முடிவதில்லை. ஒரு சில காதலை தவிர காரணம் இளமையின் வேகம், மோகம் கண்டவுடன் காதல் கொள்ளச் செய்கிறது. அது முகநூல் வழியாக இன்றைய அநேக காதலர்கள் தோன்றுகிறார்கள். மண முடித்தவர்கள் கூட இவ்வலையில் சிக்கி குடும்ப வாழ்வை சீரழித்து போவதற்கும் காரணமாக அமைகிறது. ஆகவே காதல் என்பது :

- ✳ ஒருவருடைய வாழ்க்கைக்கு ஒருவர் இன்றியமையாதவர் என்ற நிலையில் காதல் கொள்வதுதான் உயர்ந்த காதலாகும். **– பெரியார்.**
- ✳ சாதியைப் பார்த்து மதத்தைப் பார்த்து காதலிப்பது காதலல்ல! அது ஒரு வகை வியாபாரம். **– பிரேம் சந்த்**
- ✳ காதல் என்னும் நீரூற்று என்றும் மாசு படியாதது, பரிசுத்தமானது. **– சேக்ஸ்பியர்**
- ✳ உணர்ச்சிகள் ஆரம்பித்து வைக்க, அறிவு வந்து முடித்து வைப்பதுதான் காதல். **– நெப்போலியன்**
- ✳ காதல் ஆளைப் பார்க்காது, சாதியைப் பார்க்காது, மொழி, நாட்டைப் பார்க்காது. அதற்குத் தெரிந்தது உள்ளம் மட்டுமே. **– அகிலன்**
- ✳ காதலால் வாழ்ந்த நகரங்களைவிட அழிந்த நகரங்களே அதிகம். **– புளுடார்க்**
- ✳ காதல் என்பது சோம்பேறிகளுக்கு ஒரு பொழுது போக்கு. சுறுசுறுப்பானவர்களுக்கு அது ஒரு வேலை. ஆனால் அரசர்களுக்கோ அது அவர்களது சாம்ராஜ்யங்களையே மூழ்கடித்து விடக்கூடிய பெரும் ஆபத்து. **– நெப்போலியன்**



# ஞாயிறு சிந்தனை

பேதுரு



## பொதுக்காலத்தின் 6வது ஞாயிறு 15.02.2015

**வாசக விளக்கம்:** யூத சமுதாயத்திலே தீட்டு என்று தொழுநோயாளர் ஓரம் கட்டப்பட்டதை இன்றைய முதல் வாசகம் விளக்குகின்றது. தொழுநோய் என்று குருவால் அறிவிக்கப்பட்ட ஒருவன் தீட்டுப்பட்டவன் என்றும், பாவத்தின் விளைவாக பெற்றுக்கொண்ட தண்டனை என்றும் கருதப்பட்டு சமுதாயத்தை விட்டு, குடும்பத்தை விட்டு ஓரம் கட்டப்படுகின்றான். இரண்டாம் வாசகத்தில் கொரிந்து நகர மக்களுக்கு பாவ வாழ்க்கையை விட்டு கடவுளின் மக்களாக வாழ அழைப்பு விடுக்கின்றார் பவுல் அடியார். நற்செய்தியில் இயேசு தொழுநோயுள்ள ஒருவனை தொட்டுக் குணப்படுத்துகின்றார். சாவை தன் கண்முன் கொண்டு வாழ்ந்து எல்லா சட்டங்களையும் மீறி இயேசு தன்னைக் குணப்படுத்துவார் என்ற நம்பிக்கையோடு வந்தவனை இயேசு குணப்படுத்துகின்றார். நாம் அனைவரும் சகோதர சகோதரிகள் எமது அப்பா தந்தை அனுபவத்தை எந்த ஒரு சக்தியாலும் பிரிக்க முடியாது, பிரிக்கக் கூடாது என்பது தான் இன்றைய வழிபாட்டின் சாரம்சமாக இருக்கின்றது. இயேசு உடைந்தவர்களை உருவாக்க உருகுலைகின்றார் என்பதை நற்செய்தி எண்பித்துக் காட்டுகிறது. எனவே நாமும் நமக்கும் கடவுளுக்கு, நமக்கும் மற்றவர்களுக்கும் உள்ள உறவை வளர்த்து பிரிவினைகளை தகர்ப்போம். கடவுளின் பிள்ளைகளாக மாறுவோம். இதற்காக திருப்பலியில் மன்றாடுவோம்.

**முதல் வாசகம் :** லேவி 13:1-2, 44-46
தொழுநோயாளி பாளையத்திற்கு வெளியே தனியாகக் குடியிருப்பார்

**பதிலுரைப்பாடல் :** ஆண்டவரே நீரே எனக்குப் புகழிடம்

**இரண்டாம் வாசகம் :** 1 கொரி 10:31-11:1
நான் கிறிஸ்துவைப்போல நடக்கின்றேன். நீங்கள் என்னைப் போல் நடங்கள்

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா நம்மிடையே பெரிய இறைவாக்கினர் ஒருவர் தோன்றியிருக்கிறார். கடவுள் தம் மக்களைத் தேடி வந்துள்ளார் அல்லேலூயா

**நற்செய்தி :** மாற் 1:40-45

### விசுவாசிகளின் மன்றாட்டு

பதில்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

ஆண்டவரின் சமூகத்தில் அனைவரும் சமமானவர்களே என்ற கொள்கையோடு அனைத்து மக்களையும் வழிநடத்தும் தூய திருச்சபையையும் அதன் தலைவரான திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் யாவரும் பிரிவினைகள் அற்ற இறை சமூகத்தை கட்டியெழுப்பும் பணியில் அயராது உழைக்கத் தேவையான வரங்களை தந்தருள வேண்டுமென்று...

எமது நாட்டின் அரசியல் சமூகத் தவைர்களும், மக்களும் பிரிவினைகள் அற்ற ஒன்றுபட்ட சமுதாயத்தை உருவாக்கவும், ஏற்றத்தாழ்வுகளை மறந்து ஏழை, எளியவரை அன்பு செய்யவும், இயேசு உடைப்பட்டவர்களோடு உடனிருக்கிறார் என்பதை உணர்ந்து வறுமை, நோய், துன்பங்களால் பீடிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்து வாழவும் வேண்டிய நல்ல உள்ளத்தை தந்தருள வேண்டுமென்று...

எம்மத்தியில் அன்பின் சமுதாயம் மலர்ந்திடவும், சாதி, மதம், இனம், மொழி, இடம் என பிரிவுபடாத உள்ளத்துடன் வாழவும், நமக்கும், மற்றவர்களுக்கும் உள்ள பிரிவினைகளை களைந்து, நம்பிக்கையே வாழ்வின் ஊற்று, உறவே வாழ்வின் மையம் என வாழ்ந்திடத் தேவையான அருள் வரங்களைத் தந்தருள வேண்டுமென்று....

## தவக்காலத்தின் 1வது ஞாயிறு 22.02.2015

**வாசக விளக்கம்:** தவக்காலத்தில் முதல் வாரத்தில் இருக்கும் நாம் இறை அருளையும், அன்பையும் பெற்று இறைவனோடு ஒன்றித்திருக்க வேண்டும். அதற்கு நம்மையே நாம் தயாரிக்க வேண்டும். என்று இன்றைய வாசகங்கள் அனைத்தும் அழைப்பு விடுக்கின்றன. இன்றைய நற்செய்தி இயேசுவின் பணிவாழ்வின் நோக்கத்தை மிகச் சுருக்கமாக விளக்குகின்றது. இறையாட்சி என்பது அரசியல் ஆட்சி அல்ல, அன்பின் ஆட்சி, ஆசியின் ஆட்சி, பொறுமையின் ஆட்சி, தன்னையே அளிக்கும் ஆட்சி, இந்த ஆட்சியில் குடிமகனாக இருக்க வேண்டுமென்றால் மனம் திரும்ப வேண்டும். நற்செய்தியை நம்ப வேண்டும். இயேசுக் கிறிஸ்து தந்தையாம் கடவுளோடு ஆவியிலும், உள்ளத்திலும் ஒன்றாக இணைந்து இருந்தார். எனவே இயேசு சாத்தானை வென்று சரித்திரம் படைத்தார். கடவுள் ஒருவரே என் உரிமைச் சொத்து. அவரே என் அரனும் கோட்டையுமாவார். அவரிடம் மட்டுமே என் ஆன்மா தாகம் கொள்ளும் என்று நமது உடல், உள்ளம், உயிர், ஆன்மா அனைத்தையும் அர்ப்பணித்தால் நாமும் கடவுளின் ஆற்றல் மூலம் நமக்கு தன்னலத்தை நோக்கி நடந்து கொண்டிருக்கும் நம்மை பிறர் நலத்தை நோக்கி நடக்க இயேசு அழைக்கின்றார். அவரது நற்செய்தியை ஏற்று நடக்க இறையருள் வேண்டுவோம்.

**முதல் வாசகம் :** தொ.நூ 9:8-15
வெள்ளப்பெருக்கிலிருந்து மீட்கப்பட்ட நோவாவுடன் கடவுள் செய்த உடன்படிக்கை

**பதிலுரைப்பாடல் :** ஆண்டவரது உடன்படிக்கையை கடைப்பிடிப்போரின் பாதைகள் உண்மையானவை.

**இரண்டாம் வாசகம் :** 1 பேதுரு 3:18-22
இப்போது உங்களை மீட்கும் திருமுழுக்கிற்கு இந்த நீர் முன்னடையாளமாயிருக்கிறது.

**நற்செய்திக்கு முன் வசனம் :**
மனிதர் அப்பத்தினால் மட்டுமல்ல மாறாக கடவுளின் வாய்ச்சொல் ஒவ்வொன்றாலும் வாழ்வர்

**நற்செய்தி :** மாற் 1:12-15

### விசுவாசிகளின் மன்றாட்டு

பதில்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

இயேசுவின் பணிவாழ்வை பின்பற்றி மக்களை இறையாட்சிக்கு அழைத்துச் செல்லும் திருச்சபையானது, இத்தவக்காலத்தில் மக்களின் மனமாற்றத்திற்கான வழியைக் காட்டவும், அனைவரும் இறை அருளையும், அன்பையும் பெற்று மகிழவும், திருத்தந்தையின் தவக்கால சிந்தனைகளை நடைமுறைப்படுத்தவும் வேண்டிய அருள் வரங்களை தந்தருள வேண்டுமென்று...

இறையாட்சி என்பது அரசியல் ஆட்சி அல்ல அது அன்பின் ஆட்சி ஆசீரின் ஆட்சி, பொறுமையின் ஆட்சி இவற்றை உணர்ந்தவர்களாக எமது நாட்டை வழிநடத்துவோர் வாழவும் இவ்வாறான ஆட்சி நம்மிடையே இருக்க வேண்டுமென்றால் நாம் மனம் திரும்ப வேண்டும் நற்செய்தியை நம்ப வேண்டும் இதற்கு வேண்டிய அருள் வரங்களை தந்தருள வேண்டுமென்று...

நாம் சந்திக்கும் பிரச்சினை கவலை, துன்பம், இடர், சோதனை அனைத்தையும் நம்மால் வெல்ல முடியும் என்று நம்பும்போது கடவுள் நமக்கு உதவி செய்கிறார் என்பதை நம்பவும் சோதனைகளையும், துன்பங்களையும் வெல்ல இயேசுவைப் போல் செபத்தில் நிலைத்திருக்கவும் வேண்டிய மனநிலையைத் தந்தருள வேண்டுமென்று....

# திருத்தந்தையின் செய்திகள்

- ✦ கிறிஸ்து தன் திரு அவையை ஒவ்வொரு நாளும் சந்திக்க வருவதால் நாம் நம் ஆன்மாவை எப்போதும் திறந்து வைத்திருப்பவர்களாகச் செயல்பட வேண்டும்
- ✦ ஒருவர் கடவுளோடு நடந்துவரும் பயணத்தின் புதிரான வாழ்வைக் காத்து நடத்துவது அமைதியே. அனைத்து விளம்பரங்களிலிருந்தும், நம்மைப் பாதுகாப்பதற்குத் தேவையான அமைதியை அன்பு செய்வதற்கு நம் ஆண்டவரிடம் வரம் வேண்டுவோம்.
- ✦ இன்றைய உலகில் வீணாக்கப்படும் உணவு, உலகில் பசியால் வாடும் எல்லோருக்கும் உணவளிக்கப் போதுமானது.
- ✦ தாழ்ச்சியே வளம் நிறைந்த வாழ்வுக்கு அவசியம்.
- ✦ சுகமான நமக்குள்ளேயே தங்கியிருக்கும், நிலையிலிருந்து வெளியேறி சமுதாயத்தின் விளிம்பில் வாழ்வோருக்கு நற்செய்தியின் ஒளியை எடுத்துச் செல்வோம்.

# தீர்மானம் எடுப்போம்

**நாம் இவ்வருட தவக்காலத்தில் காலடி எடுத்து வைக்க இருக்கின்றோம். இத்தவக்காலத்தை பயன் உள்ள முறையில் பயன்படுத்தி இறைவனில் வாழ கீழே பலவீதமான மதிப்பீடுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இம்மதிப்பீடுகளை நாளுக்கொன்றாக இத்தவக்காலத்தில் கடைப்பிடிக்க தீர்மானம் எடுப்போம். அதற்காக ஒரு தவக்காலச் சுவடியை தயார்செய்வோம்**

அன்பு செய்வோம்,
அரவணைப்போம்,
அறிவு புகட்டுவோம்,
அநீதி களைவோம்
ஆத்திரம் அடக்குவோம்
ஆலயத்திற்கு உதவுவோம்
ஆசையை நெறிப்படுத்துவோம்
ஆற்றல்களை நன்மைக்கு அர்ப்பணிப்போம்
இறைவழித் தெரிவோம்
இதயத்தை வளமாக்குவோம்
இணைபணிக்கு உதவுபோம்
இறைவாக்கு வாசிப்போம்
ஈவதை வளர்ப்போம்
உறவினைப் பேணுவோம்
உள்ளத்தை உரைப்போம்
உண்மையை நேசிப்போம்
உரிமையைக் காப்போம்
எல்லோருடனும் நற்புறவை வளர்ப்போம்
எளிமையை விரும்புவோம்
எப்போதும் நன்றி சொல்வோம்
எதிலும் இறைமையைக் காண்போம்
ஏழையரை மதிப்போம்
விட்டுக்கொடுப்போம்
சிக்கனத்தை கடைப்பிடிப்போம்
வறுமையை ஒழிப்போம்
நேர்மையில் வாழ்வோம்
மனித நேயம் வளர்ப்போம்
ஐயம் அகற்றுவோம்
ஒற்றுமை வழி உயர்வு காண்போம்
கடமைக்கு முதலிடம் அளிப்போம்
கற்றதில் நிலைப்போம்
கனிவைப் பெருக்குவோம்
சமத்துவம் வளர்ப்போம்
சகோதரத்துவம் போற்றுவோம்
தாழ்வு மனப்பான்மையை தகர்ப்போம்
நுகர்வு நெறியிலிருந்து விடுபடுவோம்
பிறர் வாழ்வுக்கு வழிகாட்டுவோம்
தன்னலம் தகர்ப்போம்
சாதி வெறியில் இருந்து விடுபடுவோம்.

1ம் பக்கத் தொடர்ச்சி...

# ஏமது தலைமை ஆயர் பேசுகின்றார்



## அன்புக்குரிய சகோதரர் சகோதரிகளே!

“தம் மகனைக் கொன்றவர்களைச் சிலுவையின் அடியிலிருந்து அவர் மன்னித்தது போலவும், அம்மகனின் உயிரற்ற உடலை அவர் தம் கரங்களில் தாங்கியமை போலவும் அவர் இலங்கை மக்கள் அனைவரும் ஒரு பெரும் ஒப்புரவுக்கு அழைக்கப்பட்டவர்களாக இறைவனின் மன்னிப்பு மற்றும் கருணை எனப்படும் திருத் தைலத்தின் ஊடாக உண்மையான நலமாக்கலைப் பெறுவார்களாக”

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் விஜயத்தின் பின்னர் தை மாதம் 21ம் திகதி அவர் எனக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் அவர் இவ்வாறு கூறுகின்றார்: “இலங்கை மக்களைப் பொறுத்த மட்டில் என் மனதில் இரு விடயங்கள் விசேடமாகப் பதிவாகியுள்ளன. நான் அங்கு வந்து சேர்ந்த வேளையில் அவர்கள் எனக்களித்த அன்பான வரவேற்பும் (குறிப்பாக விமான நிலையத்திலிருந்து நகர் மத்திக்கு நான் பிரயாணம் செய்த 29 கிலோமீட்டர் தொலைவு வரை சாலையின் இருமருங்கும் அவர்கள் கூடியிருந்தமை) மடுத் திருப்பதியுமாகும். பல்வேறு மதங்களைச் சார்ந்தவர்கள் பரிசுத்த கன்னி மரியிடம் வேண்டுதல் செய்தமையை நான் கண்டதாவது அவர் தமது மக்களை எப்போதும் கைவிடமாட்டார் என்றும் அவர் அம்மக்களை சமாதானத்தினதும் நல்லிணக்கத்திற்குமான பாதையில் வழிநடத்துவார் என்றும் நாம் கொள்ளும் நம்பிக்கையை வலுப்படுத்தியது”. உண்மையில் திருத்தந்தை அவர்கள் இலங்கையின் எம் மக்கள் தம் இன, மொழி, மத வேறுபாடுகளுக்கு மத்தியிலும்கூட ஒன்றிணைந்து வாழுவதைக் கண்டு மிகவும் வியப்படைந்தார் எனலாம். மக்கள் தம் அடிமட்ட வாழ்வில் இத்தனை ஒன்றிணைவும் வெளிப்படையான தன்மையும் கலாச்சார ஊடுருவலும் இருப்பதானது எதிர்காலத்திற்கான நல்லதொரு சமிக்ஞையாக அவர் கண்டார். நான் அவரோடு கூட உலங்கு வானூர்தியில் மடுத் திருப்பதிக்கு பயணித்த வேளையில் அவருடன் நான் கொண்டிருந்த நீண்ட உரையாடலில் அவர் இதனை அச்சுறுத்தலாக அல்லாமல் ஒரு பெரும் வாய்ப்பாகவே கருதினார். ஒருவேளை இத்தகைய எண்ணமே அவருக்கு நான் கொடுத்த ஆலோசனையின்படி, எமது நிரலில் இல்லாதிருந்தாலும் கூட, அவர் மாளிகாகந்தை பௌத்த விகாரைக்கு விஜயம் செய்திட முடிவெடுத்தார். இப்படியாக புத்த பெருமானை விசுவசிக்கும் மிகப் பெரும்பாலான இலங்கை மக்கள்பால் தமது திறந்த உள்ளத்தினை வெளிப்படுத்தியமை ஒரு நல்லெண்ண அடையாளமாக அமைந்தது. இதே நல்லெண்ணத்தினை அவர் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற மதத் தலைவர்களுக்கான ஒன்றுகூடலில், பௌத்த, இந்து, இஸ்லாம், கத்தோலிக்கரல்லாத கிறிஸ்தவர்கள் ஆகியோருடன் அவர் தனித்தனியாகப் பேசி அவர்களனைவருடனும் சகோதரத்துவமாகப் பழகி வெளிப்படுத்தவும், அவர்களை வாழ்த்தவும், நலன் விசாரிக்கவும் தவறாதிருந்தமை இத்தகைய

வெளிப்படுத்தியது. இந்த விஜயமானது அடிப்படையில் கத்தோலிக்க திருச்சபையும் இதர மத சமூகங்களும் புரிந்துணர்வும் இணக்கமும் கொண்ட சூழலில் வாழும் தன்மையை கண்டிட உதவியது. இவ்வாறு நாம் மற்றவர்களால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய வாய்ப்பினை அதிகரிக்க உதவுகின்றது. குறிப்பாக நாம் வளர்ந்த மக்களாக வரலாற்று ரீதியான குற்றங்காணும் தன்மையையும் அழுத்தங்களையும் களைய உதவியுள்ளது. இந்த ஒன்றுகூடலின்போது திருத்தந்தை கூறியதாவது: “உங்கள் நாட்டில் இத்தருணத்தில் எத்தனை பேர் சமூகத்தின் ஆன்மீக அடித்தளத்தினை மீளவும் கட்டியெழுப்பும் நல்லெண்ணத்தைக் கொண்டிருக்கின்றீர்கள். பல்வேறு மத சமூகங்களின் தலைவர்கள் மத்தியில் இருக்கும் நல்லுறவின் எண்ணம் எல்லா இலங்கை மக்கள் மத்தியிலும் ஒப்புரவு செய்யும் வெளிப்பாட்டிற்காக அர்ப்பணத்தை வெளிப்படுத்துவதாக. சமூகத்தினதும் அதன் தாபனங்களிலும் இது செய்யப்படுவதாக. இரண்டாவதாக புனிதராக்கும் வைபவத்தின் திருப்பலியானது எமது மக்களின் விசுவாசத்தை உறுதியாக வெளிப்படுத்தும் நிகழ்வாக அமைந்திருந்தது. பெரும்பாலான மக்கள் அவ்விடத்தில் முந்திய தினமே வந்திருந்து, திறந்த வெளியில் உறங்கி, புல்வெளியில் இடம் பகிர்ந்து, செபித்து, பாடி, ஆண்டவர் மீதும், இவ்வுலகில் அவரது பிரதிநிதியாகிய திருத்தந்தை மீதும்கொண்ட அன்பினை பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்ட நிலையிலும் வெளிப்படுத்துபவர்களாக இருந்தனர். அங்கு குழுமியிருந்த மக்கள் தொகையும், திருத்தந்தையைக் கண்டவுடன் அவர்கள் காட்டிய ஆர்ப்பரிப்பும் மக்களது எளிமையான கேள்விகளுக்கு அப்பாற்பட்ட விசுவாசத்தினையும் வெளிப்படுத்தின. இலங்கையின் மிகப் பெரும் அப்போஸ்தலரான புனித யோசவ் வாஸ் அடிகளாரின் வெற்றியை இம்மக்கள் பிரதிபலித்தனர் எனலாம். இன்றைக்கு இலங்கையில் திருச்சபையானது இத்தகைய நிலையில் இருக்கின்றது என்றால் அதற்குக் காரணம் கோவாவின் இந்த பெருமகனேயாவார். இவரை இறைவன் அழைத்து எம் முன்னோர் மத்தியில் அவரது இரக்கத்தின் வெளிப்பாடாகவும் அவர் எம்மைப் பராமரிப்பதன் வெளிப்பாடாகவும் இருந்தது. புனித யோசவ்வாஸ் அவர்கள் அத்தகையதோர் அர்ப்பணிப்பினை அந்நாட்களில் செய்திராவிடில் எம்மில் பலர், உரோமையின் அப்போஸ்தலர்களானதும் மறைசாட்சிகளானதும்

இன்று கத்தோலிக்கராகவே இருந்திருக்க முடியாது. பாப்பரசர் தம் மறையுரையில் புனித யோசவ் வாஸ் அவர்கள் உதாரணம் மிக்க ஒரு குருவானவராக இன்றைய குருக்களுக்கு ஏற்ற முன்மாதிரியான நபராக இருந்தார் என்றும், மத இன வேறுபாடுகளின்றி அனைவருக்கும் அன்பு காட்டுகின்றவராகவும் சிறப்பான மறைபரப்பாளராகவும் இருந்தார் என்றார். “ஒரு பல சமய சூழலில் மாண்புடனும், அர்ப்பணத்துடனும் தளரா உறுதியோடும், தாழ்ச்சியோடும் சத்தியத்தை எடுத்துரைக்கவும், நற்செய்தியின் எழிலை எடுத்தியம்பவும் செய்தார்” (இலங்கை, காலி முகத் திடலில் புனிராக்கும் வைபவத்தில் திருத்தந்தை பிரான்சிசின் மறையுரை, 2015ம் ஆண்டு தை, 14ம் திகதி) மடுத் திருப்பதியில் எல்லா இன சமய மக்களும் திருத்தாயாரை அன்புடனும் பாசத்துடனும் தம் இதயத்திற்கு நெருக்கமாக வைத்திருந்தமையைக் கண்டு மனம் நெகிழ்ந்தார். யுத்த காலங்களில் அவர் அவர்களுக்கு அடைக்கலமாகவும் ஆறுதலாகவும் எப்படி இருந்தாரோ அதுபோலவே இன்றும் விண்ணிலிருந்து தம் மக்கள் தாம் அனுபவித்த பயங்கரமான துன்ப துயரங்களினூடாகவே கூட ஒருவரோடொருவர் ஒப்புரவாக அவர் உதவுவார் என்றார். திருத்தந்தை அவர்களுக்கு மரியாள் இதற்கான ஒரு மாதிரியாக உதாரணமாகக் காணப்பட்டார். “தம் மகனைக் கொன்றவர்களைச் சிலுவையின் அடியிலிருந்து அவர் மன்னித்ததுபோலவும், அம் மகனின் உயிரற்ற உடலை அவர் தம் கரங்களில் தாங்கியமை போலவும் அவர் இலங்கை மக்கள் அனைவரும் ஒரு பெரும் ஒப்புரவுக்கு அழைக்கப்பட்டவர்களாக இறைவனின் மன்னிப்பு மற்றும் கருணை எனப்படும் திருத்தைலத்தின் ஊடாக உண்மையான நலமாக்கலைப் பெறுவார்களாக” (மடுத்திருப்பதியில் மறையுரை - 14 தை 2015). அன்புக்குரிய சகோதர சகோதரிகளே, திருத்தந்தை அவர்களது விஜயமானது கூட ஒரு புதுமை எனலாம். ஏனெனில் அவர் விஜயம் செய்வதற்கு ஒரு சில தினங்களுக்கு முன்னரே ஒரு சனாதிபதி தேர்தல் திடீரெனப் பிரகடனப்படுத்தப்பட்டதும் அது நம்பகமான பெரும் விவாதமும் ஆரம்பித்து இவ்விஜயம் மேற்கொள்ளப்பட வேண்டுமா? என்ற கேள்வியும் எழுந்தது. எமது நாட்டில வழமையாக ஏற்படுவதுபோல் வன்முறை வெடித்து இவ்விஜயத்திற்கு பாதகம் ஏற்படக்கூடிய

அஞ்சினர். பல கடிதங்கள், தொலைபேசி அழைப்புக்கள், பத்திரிகைக் குறிப்புக்கள் ஆகியவற்றோடு நேரடியான பத்திரிகை தாக்குதல்கள் கூட ஏற்பாடு செய்யப்பட்டன. ஏற்கனவே இந்த விஜயம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில், அதுவும் திருத்தந்தையின் விஜயமானது இன்னொரு நாட்டிற்கும் கூட ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில் எம்மால் இதனை இரத்து செய்யவோ அல்லது பின்போடவோ முடியாத நிலையில் நாம் இருந்தோம். மேலும் ஆசியாவின் சின்னஞ்சிறிய நாடாகிய இலங்கைக்கு திருத்தந்தை வருகிறார் என்ற நிலையில் இவ்வாறான ஒரு செயல் அவரை அவமதிப்பதாகவோ காணப்பட்டிருக்கலாம். தகுதியற்ற நம்மீது அவர் காட்டியதொரு மதிப்பாக இது இருந்தது. அத்தோடு நம்மை அறியாமலேயே நம் நாடு ஒரு தேர்தலை பண்போடு நடத்த இயலாத ஒரு நாடு என்ற அபகீர்த்தியை நாமே நம்மீது ஏற்படுத்திக்கொள்வதாகவும் அமைந்து விடும். எனவே ஆயர் மன்றம் இறைவன் மீது நம்பிக்கை கொண்டவர்களாக இவ்விஜயத்தை முன்னெடுப்பது என்று முடிவு செய்தோம்...

தொடர்ச்சி 15ம் பக்கம்

ஆண்டவர்
போற்றப்படவும் உயர்த்தப்படவும் கடவாராக
நன்றி

கிறிஸ்துவில் உங்கள் அர்ப்பணிக்க





# தனது ஆசிய விஜயம் பற்றி திருத்தந்தையின் அனுபவப் பகிர்வு

நீண்ட காலமாகத் தொடர்ந்த உள்நாட்டுப்போரின் விளைவுகளை இலங்கை நாடு இன்னும் அனுபவித்துக் கொண்டிருக்கிறது என்று திருத்தந்தை தெரிவித்தார். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஆசியாவில் தன் திருப் பயணத்தை முடித்துக் கொண்டு உரோமாபுரி திரும்பிய பின் ஆசியாவில் தான் பயணம் செய்த இலங்கை மற்றும் பிலிப்பீன்ஸ் நாடுகள் குறித்த தனது இனிமையான எண்ண ஓட்டங்களைப் பகிர்ந்து கொண்டார்.

இலங்கை மற்றும் பிலிப்பீன்ஸ் நாடுகளில் நான் மேற்கொண்ட திருப்பயணம், அங்குள்ள கத்தோலிக்க சமூகங்களுடனான மகிழ்வுடன் கூடிய சந்திப்பை உள்ளடக்கியதாக இருந்தது. இலங்கையில் நான் மிகப்பெரும் மறைப்பணியாளர் யோசேவ்வாஸை புனிதராக அறிவித்தேன். அந்நாட்டில், ஏழைகளுக்கான பணியிலும், பிறமத விசுவாசிகளுடன் கொண்டிருக்கும் மதிப்புடன் கூடிய உறவுகளிலும் இன்னும் தூண்டுதலை வழங்குவதாக உள்ளன புனித யோசேவ்வாஸின் பிறரன்புப் பணி எடுத்துக்காட்டுக்கள்.

நீண்டகாலமாகத் தொடர்ந்த உள்நாட்டுப் போரின் விளைவுகளை இலங்கை நாடு இன்னும் அனுபவித்துக் கொண்டிருக்கிறது.

அமைதி மற்றும் ஒப்புரவின் கருவிகளாக அனைத்து மதத்தலைவர்களும் ஒன்றிணைந்து உழைப்போம் என்ற அழைப்பை, இலங்கையில் நான் மதத்தலைவர்களுடன் நடத்திய சந்திப்பின்போது விடுத்தேன்.

பிலிப்பீன்ஸ் நாட்டிற்கான எனது திருப்பயணம், அந்நாட்டில் யொலண்டா புயலால் பாதிக்கப்பட்ட மக்களுடனான எனது ஒருமைப்பாட்டின் அடையாளமாக இருந்தது. நம்மை ஒருபோதும் ஏமாற்றாத இறைக்கருணையின் மீதான நம்பிக்கையினை தக்லோ பான் தீவில் கொண்டாடிச் சிறப்பித்தோம். இறைத்திட்டத்திலும் சமூகத்திலும் குடும்பங்கள் வகிக்கும் முக்கிய அடிப்படையான இடத்தைப் பாதுகாத்து அதனை வாழ்ந்திட வேண்டும் என குடும்பங்களை நோக்கி மணிலாவில் அழைப்புவிடுத்தேன். கூறுபடா நிலையையும், ஏழைகள் மீதான இரக்கத்தையும் கொண்ட ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்புமாறு இளைஞர்களுடனான சந்திப்பின் போது அவர்களிடம் விண்ணப்பித்தேன். என் திருப்பயணத்தின் இறுதியில் பிலிப்பீனோ மக்களை, அவர்களுக்கு ஆதரவு அளிப்பவரும், பாதுகாவலருமான குழந்தை இயேசுவிடம் ஒப்படைத்தேன். மேலும் பிலிப்பீனோ மக்கள், இந்த மிக உயர்ந்த ஆசியக் கண்டத்தில் நற்செய்தியின் மதிப்புமிக்க சாட்சிகளாக உறுதியுடன் தொடர்ந்து செயல்படுமாறு வலியுறுத்தினேன்.

**நன்றி : பாதுகாவலன்**



# நான் என்றும் உங்களை மறக்கமாட்டேன்

உங்களை நான் என்றென்றும் மறக்க மாட்டேன், மறக்காமல் இருப்பதற்கு இறைவன் எனக்கு துணை செய்வாராக என்ற வார்த்தைகள் அடங்கிய ஒரு மடலை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் பிலிப்பின்ஸ்

அனுப்பியுள்ளார்.

தை 15 முதல் 19ம் திகதி வரை பிலிப்பின்ஸ் நாட்டில் மேற்கொண்ட பயணத்தின் உச்ச நிகழ்வாக ஹையான் சூறாவளியில் சிக்கிய மக்களோடு இணைந்து திருப்பலியை நிறைவேற்ற முடிந்ததென்று கூறிய திருத்தந்தை 17ம் திகதி 'papete' என்ற மற்றொரு புயலின் தாக்கத்தினால் Tacloban பகுதியில் மேற்கொண்ட

விரைவில் முடிக்கப்பட வேண்டிய நிலைக்கு தன் வருத்தத்தை தெரிவித்தார் திருத்தந்தை. அவ்வேளையில் தான் பொறுமையின்றி நடந்ததாக மக்கள் உணர்ந்தால் தன்னை மன்னிக்க வேண்டும் என்றும் இம்மடலில் கூறியுள்ளார். பாலோ பேராயரும், அப்பகுதி மக்களும் காட்டிய இறைப்பற்று தன் வாழ்வில் மறக்க முடியாத அனுபவம் என்று கூறினார் திருத்தந்தை.




# மாதிரிக் குடும்பம்

## ஆன்மீகத்தின் முன்மாதிரி

பெற்றோரின் ஆன்மீக வாழ்வு பிள்ளைகளுக்குச் சிறந்த முன்மாதிரி. எளிமையாக வாழ்ந்தாலும், ஏற்றமிகு வாழ்வு நடத்தியது திருக்குடும்பம். துன்பத்தில் தவித்தாலும், தூய்மைமிகு வாழ்வு நடத்தியது திருக்குடும்பம். கஷ்டத்திற்கு மத்தியிலும், கடவுளு-க்கேற்ற வாழ்வு நடத்தியது திருக்குடும்பம். அவ்வாறே, ஆஞ்செலோவின் குடும்பமும் ஏழ்மை, நிலையிலும் இறைவனுக்கு ஏற்புடைய வாழ்வு வாழ்ந்த குடும்பம்.

திருமுழுக்கு எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் பொதுவான அருள் அடையாளம். இது கடவுளின் கொடைக்கு ஒரு அச்சாரமாக உள்ளது. அதைக்கொண்டு நாம் நமது வாழ்நாள் முழுவதும் பலன்தர முயல வேண்டும். திருமுழுக்குப் பெறும்போது நம்மிடமுள்ள பிறப்புநிலைப் பாவத்தைப் போக்குகிறது. அவரவரிடமுள்ள செயல்முறைப் பாவங்களையும் அகற்றுகிறது. மனிதரைக் கடவுளின் பிள்ளையாக்குகிறது. இயேசுக்கிறிஸ்துவின் சகோதர சகோதரியாக்குகிறது. மற்றும் திருச்சபையின் உறுப்பினராக்குகிறது. இவ்வுண்மைகளை உணர்ந்திருந்த ஆஞ்செலோவின் பெற்றோர் குழந்தை பிறந்த அன்றே திருமுழுக்கு அளிக்க விரும்பினர். பிறந்த நாளன்றே குழந்தைகளுக்குத் திருமுழுக்குக் கொடுப்பது அக்கால வழக்கமும் கூட.

## புனித எஜீறியுஸ் ஆலயம்

ஸோத்தோ இல் மோந்தே கிராமத்திற்கு அழகு சேர்த்தது அங்கிருந்த புனித எஜீறியுஸ் ஆலயம். குழந்தை பிறந்த அன்று கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது குழந்தையின் தாயும் தந்தையும், தாய்மாமன் சவேரி-யோவும் குழந்தையோடு இக்கோயிலுக்குச் சென்றனர்.




ஆக்கம் : A. லீமன், தரம் – 10



ஆக்கம் : U. செறினா, தரம் – 4, நல்லாயன் கன்னியர் மடம், கொழும்பு – 13



ஆக்கம் : P. டிரோசினி, தரம் – 4A

# புனித இருபத்தி மூன்றாம் ஜோன்




அப்போதைய பங்குத்தந்தை பிரான்சிஸ்கோ ரிபுசினி அருகிலுள்ள சிற்றூர்களுக்கு நோயாளிகளைச் சந்தித்து செபிக்கச் சென்றிருந்தார். இரவு அவர் வரும்வரைக் காத்திருந்து குழந்தைகளுக்குத் திருமுழுக்குக் கொடுத்-தனர். குழந்தை இறைவனுக்கும் திருச்சபைக்கும் மகனாக "ஆஞ்சலோ ஜோசேப்பே ரொங்கால்லி" என்ற முகவரியைப் பெற்றார். இந்த முகவரி உலகமெங்கும் அறியப்படும், வணக்கத்திற்குரிய மறைபொருளாக, மாறும் என்பது அன்று கொட்டிய மழைக்கு மட்டுமே தெரிந்திருந்தது.

ஆஞ்சலோ திருமுழுக்குப் பெற்ற இந்த ஆலயம் இடிந்து பாழ்பட புதிய ஆலயம் 1929ஆம் ஆண்டு கட்டியெழுப்பப்பட்டது. அதைப் புனித அருளப்பரின் பாதுகாவலில் ஒப்புக்கொடுத்து அர்ச்சித்து புனிதப்ப-டுத்தியவர் பேராயர் ஆஞ்சலோ ரொங்கால்லி என்பது நினைத்து மகிழ வேண்டிய ஒன்று. அதுமட்டுமல்லாமல் "இப்பகுதியில் வாழும் மக்கள் ஏழ்மையானக் குடும்பங்-களிலிருந்து வருபவர்கள் என்றாலும் அவர்கள் உள்ளத்தில் ஊற்றெடுக்கும் நம்பிக்கை அளவிட முடியாத செல்வமாக உள்ளது" என்று திருத்தந்தை பிரான்சிஸ் பாராட்டுகிறார்.

## உழைப்பின் முன்மாதிரி

முன்னேற்ற சுவையில் தெளிவு கொண்டு வாழ்வில் மனிதன் நிறைவாக (Perfection) இருக்க ஆசைப்படுகிறான். எந்தக்குறையும், குறைவும் இல்லாமல் இருத்தல் சாத்தியமல்ல. மாறாக, முழுமையாக (Fullness) இருக்கவே நாம் அழைக்கப்படுகின்றோம். இருப்பதை மனநிறைவோடு கொண்டு செயல்படுவதே முழுமையின் இனிமை.

ஆஞ்சலோவின் குடும்பம் முழுமையாக வாழவே ஆசைப்பட்டது. எனவே ஏழ்மையும் வறுமையும் குடும்ப அமைதியைத் தீண்டக்கூட முடியவில்லை. அன்றாடம் வயல்வெளியில் அரும்பாடுபட்டு உழைத்தது குடும்பம். தந்தையோடு இணைந்து களத்தில் வேலை செய்வதும், பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து நடப்பதும் சிறுவன் ஆஞ்சலோவிடம் காணப்பட்ட நற்பண்புகள்.

வறுமைக் குடும்பத்தில் இருந்தாலும் வளமையான நற்பண்புகளுக்கு குறைபாடேயில்லை. ஆஞ்சலோவின் தாய் புரிந்து கொள்ளுதல், பகிர்ந்து-கொள்ளுதல், விட்டுக்கொடுத்தல், தட்டிக் கொடுத்தல், உரையாடுதல், உறவாடுதல் எனப் பிள்ளைகளுக்கும் ஏனைய உறவுகளுக்குமிடையே நிறைவுச் செழிப்பைப் பூக்க வைக்கும் ஒரு இணைப்புப் பாலமாகச் செயல்-பட்டார்.

தொடரும்...




# கருணையின் அன்னை



ஒரு நாள் அன்னை தெரேசா இந்தியாவில் கல்கத்தா நகரின் ஒரு வீதி வழியாகப் போய்க் கொண்டிருந்தார். வயது சென்ற ஒரு பாட்டி வீதி ஓரத்தில் விழுந்து கிடப்பதைக் கண்டார்கள். அந்த வீதிவழியாகப் பலர் அங்குமிங்கும் போய்க் கொண்டிருந்தார்கள். ஆனால் ஒருவராவது இந்த வயோதிபப் பெண்மணியைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. அன்னை தெரேசா அவர்களுக்கு இது விசித்திரமாகவும் மனதிற்கு வேதனையாகவும் இருந்தது.

அன்னை அவர்கள் அந்தப் பாட்டியின் அண்டை சென்றார்கள். அவளைத் தூக்கி எடுத்து வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றார்கள். கல்கத்தாவில் இவளைப் போன்ற அநேகர் இருப்பதை அன்னை அறிந்து கொண்டார்கள். அவர்களை யார் கவனிப்பார்கள் என்ற கேள்வி அவர்கள் உள்ளத்தில் எழுந்தது. எனவே, அன்று தொடக்கம் ஏழைகள், அநாதைகள், கைவிடப்பட்டவர்கள் ஆகியோருக்குச் சேவை செய்யத் தொடங்கினார்கள். இந்த சேவைக்கு அவர்களோடு பெண்கள் சிலரும் சேர்ந்து கொண்டார்கள்.

அன்னை அவர்கள் தமது வாழ்நாள் முழுவதையும் ஏழைகள், அநாதைகளுக்காக அர்ப்பணித்துச் சேவை செய்து இறைதந்தைக்கு அன்பு செய்தார்கள்.

**'நாமும் அன்னை தெரேசா அவர்களைப் போல இத்தவக்காலத்தில் ஏழைகள் அநாதைகளுக்கு இரக்கச் செயல்களைச் செய்வோம்'**

E. தஜஸ்வினி , தரம் – 6

# பீடப்பணியாளர்களே இது உங்களுக்காக!



## அவருக்காய் பணிபுரிய... 4



## திருவழிபாட்டு நிகழ்வுகளின் பீடப்பணியாளர்கள்

### திருவழிபாட்டு நிகழ்வில் கையாளப்படும் பொதுவான உடலமைவுகள்

ஒவ்வொரு திருவழிபாட்டிலும் சில முக்கிய உடலமைவு முறைகளை நாம் பயன்படுத்துகிறோம். அவை ஒவ்வொன்றிற்கும் ஆழ்ந்த அர்த்தமும் இறைப்புரிதலும் உண்டு.

**1. எழுந்து நிற்றல் :**

உயிர்த்த இயேசுவுடன் நாமும் இணைந்தவர்கள் என்பதைக் காட்ட இந்த உடலமைவு பயன்படுத்தப்படுகிறது.

**2. அமர்தல் :**

இறைவார்த்தையைக் கவனமாகக் கேட்கவும் தியானிக்கவும் எந்தவித இடையூறுக்கும் இடம்கொடாதிருக்கவும் இந்த உடலமைவு பயன்படுத்தப்படுகிறது.

**3. முழந்தாற்படியிடுதல் :**

இறைவனுக்கு முன் நாம் அனைவரும் ஒன்றுமில்லாதவர்கள் என்பதை நம்முள் உணர்த்த இந்த உடலமைவு பயன்படுத்தப்படுகிறது.

**4. கரங்களைக் குவித்தல் :**

இறைவனுடன் இணைந்துள்ளோம் என்பதையும், நாம் இறைவன் மேல் வைத்துள்ள மரியாதையையும் காட்ட இந்த உடலமைவு பயன்படுத்தப்படுகிறது.

**5. தலை வணங்குதல் :**

நமது தகுதியற்ற நிலையைச் சுட்டிக்காட்டி நாம் செய்த பாவங்களுக்காக இறைவனிடம் மன்னிப்பு கோர இந்த உடலமைவு பயன்படுத்தப்படுகிறது.

### திருவழிபாட்டு நிகழ்வில் கையாளப்படும் பீடப்பணியாளர்களின் உடலமைவுகள்.

**1. எழுந்து நிற்றல் :**

பீடப்பணியாளர்கள், திருவழிபாட்டு நிகழ்வுகளில் தேவையான நேரங்களில் எந்த விதமான வேடிக்கை பார்ப்பதற்கும் இடம் கொடாமல் நேராக குருவானவரை நோக்கி எழுந்து நிற்க வேண்டும். நிற்கும் பொழுது கால்களை நேராக வைத்து நிற்கவேண்டும்.

**2. அமர்தல் :**

பீடப்பணியாளர்கள் திருவழிபாட்டு நிகழ்வுகளில் தேவையான நேரங்களில் பீடமுற்றத்தில் நிமிர்ந்து உட்கார வேண்டும். அவ்வாறு உட்காரும் போது கரங்களைத் தங்களது மடியின் மீது வைத்து அமர வேண்டும்.

**3. முழந்தாற்படியிடுதல் :**

உரிய நேரத்தில் முழந்தாற்படியிட்டு மற்ற விசுவாசிகள் போல் பக்தி பரவசத்தோடு திருவழிபாட்டு நிகழ்வில் பங்குபெற வேண்டும்.

**4. கரங்களைக் குவித்தல் :**

பீடப்பணியாளர்கள் திருவழிபாட்டு நிகழ்வுகளில் தங்களது இரண்டு கரங்களையும் சேர்த்து மார்பின் முன்பாக குவிக்க வேண்டும்.

**5. தலை வணங்குதல் :**

தனது தகுதியற்ற நிலையை உணர்ந்தவர்களாய்க் கரங்களைக் கூப்பி சிரத்தினைத் தாழ்த்தி வணங்க வேண்டும்.

**பணிவாழ்வு தொடரும்...**




## சுய மதிப்பு மேடை...

அந்தத் தன்னம்பிக்கைப் பேச்சாளர் பேச ஆரம்பித்தார். தன் பையிலிருந்து ஐநூறு ரூபாய் தாள் ஒன்றை எடுத்துக் காட்டி கேட்டார் "இந்த காசு யாருக்கு வேண்டும்?" உடனே அரங்கிலுள்ள எல்லோரும் "எனக்கு... எனக்கு..." என்று போட்டி போட்டுக் கொண்டு கைகளை உயர்த்தினார்கள்.

அதைக் கண்டுகொள்ளாதப் பேச்சாளரோ அந்த காசை நன்றாகக் கசக்கினார். பின்னர் விரித்துக் காட்டி "இப்போ இந்தக் காசு யாருக்கு வேண்டும்?" அப்போதும் போட்டி போட்டுக் கத்தினார்கள். "எனக்கு... எனக்கு..."

அதே காசை அவர் காலில் போட்டு மிதித்துக் காட்டிக் கேட்டார். "இப்போது இது யாருக்கு வேண்டும்?" மீண்டும் எல்லோரும் கைகளை உயர்த்தினர். அவர் விடவில்லை. அந்த காசை காறி உமிழ்ந்தபடி கேட்டார். "இதோ, இப்போது இது யாருக்கு வேண்டும்?"

சிலர் முகத்தைச் சுளித்தனர். ஆனால்... உயர்த்திய கைகள் அப்போதும் குறைந்தபாடில்லை.

பேச்சாளர் இப்போது தெளிவாக மேடையில் முழங்கினார்.

"நண்பர்களே...<br>
இந்தக் காசைப் போலத்தான் நீங்களும்!<br>
உன் வாழ்க்கையில் நீ...<br>
கசங்கலாம், மிதிபடலாம், காறி உமிழப்பட்டு<br>
அவமானமும் படலாம். ஆனால் உன் மதிப்போ<br>
இந்த காசைப் போல் என்றுமே குறையாது!"<br>
இறுதியாய்ச் சொன்னார்.<br>
"உன் தோல்விகளும், அவமானங்களும்<br>
உன் மதிப்பைக் குறைத்துவிட முடியாது!"

**தோல்வியின்றி வரலாறா?**<br>
**துக்கமென்ன என் தோழா?**

அவமானப்பட்டவர்கள் தான் அதிகமாகச் சாதித்திருக்கிறார்கள். - காந்தியடிகள், அண்ணல் அம்பேத்கர்.



## "தவக்காலம் வாழ்வைச் சீர்செய்து, ஆண்டவரிடம் நெருக்கமாகச் செல்லும் காலம்"

"நாம் நம் வாழ்வைச் சீர்படுத்தி, செம்மைப்படுத்தி, நம் வாழ்வை மாற்றி, நாம் ஆண்டவரிடம் நெருக்கமாகச் செல்வதற்கு உகந்த காலம் தவக்காலம். ஆனால் நல்லவர்கள் போல் முகமூடி அணிந்துள்ள வெளிவேடக்காரர்கள் போல் அல்லாமல் நேர்மையான வழியில் நாம் ஆண்டவரிடம் செல்ல வேண்டும். நாம் ஆண்டவரிடம் நெருங்கி வரவேண்டுமென்று அவர் விரும்புகிறார். நம்மை மன்னிப்பதற்கு நமக்காக காத்திருக்கின்றார் என்பதை அவர் உறுதிசெய்கிறார். நமது அணுகுமுறை உண்மையானதாக நேர்மையானதாக இருக்க வேண்டும். நாம் மற்றவர்களைவிட நன்றாக இருக்கின்றேன் என்ற எண்ணத்தையும், தங்களை நல்லவர்கள் என ஏமாற்றிக் கொள்ளும், வெளிவேடக்காரர்களின் போக்கும் அகற்றப்பட வேண்டும். மக்களை வெளிவேடக்காரர்களாக ஆக்குவது எது?

# திருத்தந்தையின் தவக்காலச் சிந்தனைகள்

## "காயமடைந்த மனிதரைக் குனிந்து கட்டித் தழுவுவது கடினமான நோன்பாகும்"

காயமடைந்த மனிதரைக் குனிந்து கட்டித் தழுவுவது மிகவும் கடினமான நோன்பாகும். மற்றும் மிகக் கடினமான பிறரன்புச் செயலாகும் என்று திருத்தந்தை துன்புறும் அல்லது காயமடைந்துள்ள நம் சகோதர சகோதரிகளின் சதையைத் தொடுவதற்கு நாம் வெட்கப்படுகின்றோமா? என்று நம்மையே கேட்டுப் பார்ப்போம். நமது விசுவாச வாழ்வு பிறரன்பு வாழ்வோடு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. இதனை நடைமுறைப்படுத்தாத கிறிஸ்தவர்கள் வெளிவேடக்காரர்கள். ஒவ்வொரு கிறிஸ்தவர்களின் வாழ்விலும், பிறரன்பின் முக்கியம் பங்கு குறித்த சிந்தனைகளை கொண்டு இருக்க வேண்டும். இதயத்தில் எல்லாவித பிறரன்பு உணர்வும் இன்றி வெளியில் நன்றாகத் தோற்றமளிக்கும் மக்கள் கூட்டம் கிறிஸ்தவம் அல்ல. மாறாக துன்புறுவோர் அனைவர் முன்னிலையிலும் எவ்வித வேறுபாடும் எவ்வித வெட்கமுமின்றி குனிந்து செயல்பட இயேசுவின் உடலை வெளிப்படுத்துவதே கிறிஸ்தவம்.

காயமடைந்த மனிதருக்கு குனிந்து உதவிசெய்த நல்ல சமாரியன் போன்ற நன்மைத்தனத்தின் தியாகமே மிகக் கடினமான நோன்பு மற்றும் பிறரன்புச் செயலாகும். நாம் தர்மம் கொடுக்கும் போது காசு போடும்போதும், ஏழையின் அல்லது தர்மம் எடுப்பவரின் கரத்தை தொடாமல் இருக்கின்றோனா? ஒருவர் நோயால் இருப்பதை அறிந்து அவரைச் சந்திக்க செல்கின்றோனா? போன்ற கேள்விகளை எழுப்பி சிந்தியுங்கள். நம் சகோதர சகோதரிகளிடம் எவ்விதம் நடந்து கொள்கின்றோமோ அதை வைத்தே நாம் நீதித் தீர்ப்பிடப்படுவோம்.

### இறைவனை மீண்டும் வாழ்வின் மையத்துக்குக் கொண்டுவர தவக்காலம் உதவுகிறது".

"நாம் ஏன் இறைவனிடம் திரும்பிச் செல்ல வேண்டும் ஏனெனில் "நமக்குள் நாம் வாழும் உலகில் நமது சமுதாயத்தில் திருச்சபையில் அனைத்தும் நலமாக இல்லாததால் மாற்றங்களைத் தேடி நாம் இறைவனிடம் திரும்பவேண்டும்" பயனுள்ள வகையில் உற்பத்தியை பெருக்குவது ஒன்றே முக்கியம் என்பதை முன்னிறுத்தும் இவ்வுலகில் கடவுள் ஒதுக்கப்படுகிறார். மீண்டும் அவரை வாழ்வின் மையத்திற்குக் கொண்டுவர தவக்காலம் உதவுகிறது.

உணவைக் குறைப்பது நம் உடல் நலனைக் கூட்டும் என்ற மனநிலையுடன் மேற்கொள்ளப்படும் உண்ணா நோன்பு, தவ முயற்சியல்ல, மாறாக அடிப்படைத் தேவைகளுடன் வாழப் பழகுவது, அடுத்தவரோடு பகிர்ந்து கொள்வது என்பவையும், உண்ணா நோன்பில் அடங்கியுள்ள அம்சங்கள். உலகில் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு செயலும் பதிலுக்கு எதையோ எதிர்பார்த்து செய்யப்படுகின்றது. எதையும் எதிர்பாராமல் அடுத்தவருக்கு வழங்குவதே உண்மையான தர்மம். நமக்குள்ளும், நம்மைச் சுற்றிலும் மீண்டும் புதியவற்றை உருவாக்க நமக்குத் தரப்பட்டுள்ள தவக்காலத்தில் நம்மை முற்றிலும், மன்னித்து மீண்டும் ஒருமுறை நாம் வாழ்வால் புதுப்பிறப்படைய இறைவன் நம்மைத் தூண்டுகிறார். எனவே அவரை நோக்கி நாம் பயணத்தை தொடங்குவோம்"

# இனிமையான இல்வாழ்விற்கு...!



4

# மன ஒன்றிப்பும் மகப்பேறும்

## திருமணமும் மகப்பேறும்.

வையகத்தில் வாழ்வாங்கு வாழ ஒருவர் பெற வேண்டிய பேறுகள் பதினாறு என்பர். "பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க" என்று தமிழ்மக்களை வாழ்த்துவது தமிழ் மரபு. அப்பதினாறு பேறுகளாவன : **1. புகழ், 2. கல்வி, 3. வலிமை, 4. வெற்றி, 5. நன்மக்கள், 6. பொன், 7. நெல், 8. நுகர்ச்சி, 9. நல்வாழ்வு, 10. அழகு, 11. அறிவு, 12. இளமை, 13. பொறுமை, 14. துணிவு, 15. நோயின்மை, 16. நீண்ட வாழ்நாள்.**

"மனிதன் பெறவேண்டிய இப்பதினாறு பேறுகளுள் மிகச் சிறந்தது அறிவு செறிந்த மக்கட்பேறு" என்கின்றார் வள்ளுவர். இறைவனுக்கு அஞ்சி வாழ்கின்ற மனிதனுக்கு இறைவன் தரும் பேறுகளாக விவிலியம் கூறுவது இரண்டு. ஒன்று நல்ல மனைவி, மற்றது நல்ல பிள்ளைகள்.

"கனிதரும் கொடி முந்திரி போல் உன் மனைவி உன் வீட்டின் உட்புறத்தில் இருப்பாள். ஒலிவச் செடிகள் போல் உன் மக்கள் பந்தியில் உன்னைச் சூழ்ந்திருப்பர். ஆண்டவருக்கு அஞ்சும் மனிதனுக்குக் கிடைக்கும் ஆசி இதுவே" (தி.பா 127:3-4). அருட்பாவில் உள்ள இதே கருத்தைக் குறட்பாவிலும் காண முடிகிறது. ஒரு வீட்டிற்கு மங்களமாக அமைவது நல்ல மனைவி, அவ்வீட்டிற்கு நன்கலமாக அமைவது நன்மக்கள்.

**"மங்களம் என்ப மனைமாட்சி மற்றும் அதன் நன்கலம் நன் மக்கட்பேறு" (குறள் 60).**

கவி தாகூர் மக்கட் செல்வத்தைப் பற்றிக் கூறவந்த போது, "ஒவ்வொரு குழந்தையும் ஒரு நல்ல செய்தியைக் கொண்டு வருகிறது. இறைவன் மனிதனிடத்தில் இன்னும் நம்பிக்கை இழக்கவில்லை என்பதுதான் அது" என்கிறார். இயேசுக்கிறிஸ்து மழலைகளிடம் மட்டற்ற அன்பு கொண்டிருந்தார். "சிறு பிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள். ஏனெனில் விண்ணரசு இத்தகையோரதே" (மத் 19:14-15) என்றார் அவர். நாம் குழந்தையைப் போன்ற மனநிலையைப் பெறவேண்டும் என்பதே கிறிஸ்துவின் விருப்பம்.

திருமணத்தின் மாபெரும் கொடை குழந்தைகள். "பலுகிப் பெருகி இவ்வுலகத்தை நிரப்புங்கள்" (தொ. நூ 1:28) என்ற இந்த இறைவாக்கு முதல் பெற்றோருக்கு வழங்கப்பட்ட திருமண வாழ்த்துச் செய்தியாகும்.

திருமண அன்பு இனப்பெருக்க வளத்தைக் கொண்டுள்ளது. திருமண அன்பு கணவன் - மனைவி ஆகிய இருவர் அடங்கிய ஒரு குறுகிய வட்டத்திற்குள் ஒடுங்கிவிடுவதில்லை. மாறாக, ஒரு புதிய உயிரை வரவேற்கும் திறந்த அன்பாக அமைந்துள்ளது. கணவன் தன்னையே மனைவிக்கும், மனைவி தன்னையே கணவனுக்கும் கையளிக்கும் போது இவர்களின் பரஸ்பரக் கையளிப்பின் கனிதான் குழந்தை.

"மடி மீது தவழ்கின்ற முல்லை மழலைச் சொல் இன்பத்தின் எல்லை" என்று கவிஞன் பாட, "வேண்டாம், வேண்டாம் வீண் தொல்லை. இரண்டிற்கும் மேலே படுதொல்லை" என்று குடும்பக் கட்டுப்பாடு பிரச்சாரம் கூறுகின்றது. இன்பத்தின் எல்லையைத் துன்பத்தின் தொல்லையாக்கிவிட்டது.

"நாம் இருவர், நமக்கு இருவர்" என்று தொடங்கி, "நாம் இருவர் நமக்கு ஒருவர்" என்று மாறி, "நாம் இருவர் நமக்கு சைபர்" என்ற மனநிலையை உருவாகி விட்டது. எவ்வளவுதான் நலிவுற்றுத் துன்புற்றாலும் "மானிட உயிர் இறைவனின் மாபெரும் கொடை" என்று திருச்சபை நம்புகிறது. அந்த உயிரை அதன் தொடக்க நிலையிலிருந்து ஒவ்வொரு நிலையிலும் திருச்சபை பாதுகாக்கின்றது. எனவே, எல்லா விதக் கருத்தடை முயற்சிகளையும் கருச்சிதைவையும் அது எதிர்க்கின்றது.

## கருத்தடையும் கருச்சிதைவும் :

கருத்தடை (Contraception) என்பது கரு உருவாகாமல் தடை செய்வது. செயற்கை முறைக் கருத்தடை பாவமாகும். ஆனால், கருச்சிதைவு (Abortion) என்பது தாயின் வயிற்றில் உருவான கருவை மனிதனின் தலையீட்டால் அழிப்பது. கருச்சிதைவு பாவம் மட்டுமல்ல, அது ஒரு பாதகமும் (Crime) ஆகும். கருச்சிதைவு செய்துகொள்கிறவர்களுக்கும் அதற்கு உடந்தையாக இருக்கிறவர்களுக்கும் திருச்சபையிலிருந்து நீக்கம் (Ex - Communication) என்ற தண்டனைகளிலெல்லாம் மிகவும் கடுமையானது. மிகப்பெரிய பாதகச் செயல்களுக்குத்தான் இத்தண்டனை கொடுக்கப்படுகின்றது. கருச்சிதைவு என்னும் குற்றத்திற்கு இத்தண்டனையைக் கொடுப்பதன் மூலம் கருச்சிதைவு உண்மையிலேயே ஒரு கொடூரமான பாதகச் செயல் என்பதைத் திருச்சபை திட்டவட்டமாக உணர்த்துகிறது. இதைக் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களாகிய நாம் அறிந்திருப்பது மிகவும் அவசியமாகும்.

"ஒரு தாய் தன் குழந்தையைத் தன் வயிற்றில் கொல்ல முடியுமென்றால் மனிதனுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது" என்று வினா எழுப்புகிறார் அன்னை தெரேசா. அதற்காக, பொறுப்பில்லாமல் கண்ணை மூடிக்கொண்டு குழந்தைகளைப் பெற்றுத்தள்ள வேண்டுமென்று ஒருக்காலும் கூறியதில்லை.

தக்க காரணங்களுக்காக மணமக்கள் இனப்பெருக்க வளமற்ற கால இடைவெளியில் திருமணப் பாலுறவு கொள்வது முறையானதே என்று திருத்தந்தை ஆறாம் சின்னப்பர் "மானிட உயிர்" என்ற தமது சுற்றுமடலில் தெளிவுபடுத்தியுள்ளார். எனவே கிறிஸ்தவத் தம்பதிகள் செயற்கைக் கருத்தடை முறைகளைக் கையாளாமல் இயற்கைக் குடும்பக் கட்டுப்பாட்டினை (Natural Family Planning) கடைப்பிடிக்க வேண்டுமென்பதே திருச்சபையின் விருப்பமாகும்.

சில திருமணங்கள் மகப்பேறில்லாத் திருமணங்களாக அமைந்துவிடுகின்றன. மணமக்கள் எவ்வளவோ விரும்பியும் அவர்களுக்கு மகப்பேறு கிட்டுவதில்லை. இத்தகைய திருமணங்கள் உண்மையான திருமணங்கள் என்றும் திருமணம் பிள்ளைப் பேற்றுக்காக மட்டும் ஏற்பட்டதல்ல என்றும் மகப்பேறில்லாத திருமணத்திலும் மணமக்களின் உறவு ஒன்றிப்பு நீடிக்கிறதென்றும் தெளிவுபடுத்தியுள்ளது இரண்டாம் வத்திக்கான் சங்கம் (இன்றைய உலகின் திருச்சபை, எண் 50).

பாலுறவு கொள்ளும் ஆற்றலின்மை (Impotency) திருமணத்திற்கு தடையாக (Impediment) உள்ளது. ஆனால், மலட்டுத்தன்மை (Steriity) திருமணத்திற்குத் தடையாக இருப்பதில்லை, திருமணத்தின் செல்லுநிலையைப் (Validity) பாதிப்பதில்லை என்று திருச்சபைச் சட்டம் கூறுகிறது. எனவே, குழந்தை இல்லை என்பதைக் காரணம் காட்டி மணமுறிவு கேட்க இயலாது.

## ஒரு தாரம் :

திருமணத்தின் முதல் மூலக்கூறு ஒருமைப் பண்பாகும். அதாவது கிறிஸ்தவத் திருமணம் ஒருதாரத் திருமணமாகும். (Monogamy). எனவே, அது பலதாரத் திருமணத்தைத் (Polgamy) தடைசெய்கிறது, விலக்குகிறது. உண்மையான திருமண அன்பு ஒருவனுக்கும் ஒருத்திக்கும் இடையே மட்டும் இருக்க முடியும். திருமண அன்பு தனி உரிமைத் தன்மை வாய்ந்த அன்பு. மணமக்களின் திருமணச் சம்மதத்தின் விளக்கம் : "நான் உன்னை என் வாழ்நாள் முழுவதும் அன்புசெய்கிறேன். உன்னை மட்டும் அன்புசெய்கிறேன்". மண வாழ்வைப் பொறுத்தவரை கிறிஸ்தவத் தம்பதிகளின் விசுவாசப் பிரமாணம் : "ஒரே மனைவியை விசுவசிக்கின்றேன், ஒரே கணவனை விசுவசிக்கின்றேன்".

பலதார மணத்தை எந்தச் சமூகமும் அனுமதிப்பதில்லை. திரைப்படக் கவிஞன் கூடப் பலதாரத்தை அல்ல, ஒரு தாரத்தைத்தான் வலியுறுத்துகிறான். "உள்ளத்தை ஒருத்திக்குக் கொடுத்துவிடு - அந்த ஒருத்தியை உயிராய் மதித்துவிடு" அந்தக் கால அரசர்கள் பல மனைவிகளை வைத்துக் கொள்வதைப் பெருமையாகவும் மதிப்பு மிக்கதாகவும் கருதினார்கள். பழங்கால அரண்மனைகளில் 300, 400 அறைகள் கொண்ட கட்டிடங்களை இன்றும் காணலாம். அக்கால அரசர்கள் "நினைவெல்லாம் நித்யா, மனமெல்லாம் மல்லிகா, உறவெல்லாம் உஷா, ஆயுள் எல்லாம் ஆஷா, பகலெல்லாம் பாமா, இரவெல்லாம் இரம்மியா" என்று வாழ்ந்தவர்கள். கற்பு என்பது ஏதோ பெண்களுக்கு மட்டும்தான், ஆண்களுக்கு இல்லை என்ற உணர்வை இது ஏற்படுத்துகிறது. கற்பை விளக்கவந்த பாரதி, "இரு கட்சிக்கும் அதைப் பொதுவில் வைப்போம்" என்றார். வான் புகழ் வள்ளுவர் கண்ட வாழ்வு முறை இதனினும் ஒரு படி மேலே.

"பிறன்மனை நோக்காப் பேராண்மை சான்றோர்க்கு அறனொன்றே ஆன்ற ஒழுக்கு" (குறள் 148) பிறருடைய மனைவியை நோக்காத பண்பே உண்மையான ஆண்மை, அதுவே ஆண்களுக்கு அழகு, அறன், அருமையான ஒழுக்கம் என்று அறுதியிட்டு உறுதிபடக் கூறுகிறார் வள்ளுவர்.

பிறர் மனை நோக்காப் பேராண்மை பற்றி விவிலியம் விளம்பும் கூற்று இவற்றுக்கெல்லாம் சிகரமாகத் திகழ்கிறது. "ஒருவன் பிறரின் மனைவியை இச்சையுடன் நோக்குவதே பாவம்" என்று எடுத்தியம்புகிறது. அதனால்தான், நமது கலாச்சாரத்தில் தாலிகட்டும் போது சிந்தனை, சொல், செயலால்கூடப் பிறர் மனைவியைத் தீண்டமாட்டேன்" என்பதை அறிக்கையிட மூன்று முடிச்சு போடுகிறார்கள். தாலிக் கயிற்றில் மூன்று முடிச்சுகள் போடுவதற்குக் கொடுக்கப்படும் பொதுவான விளக்கம் : பெண் என்பவள் கடவுள், பெற்றோர், கணவன் ஆகிய மூவர்க்கும் கட்டுப்பட்டவள் என்று. ஆனால் மனம் (சிந்தனை), வாக்கு (சொல்), காயம் (செயல்) ஆகியவற்றால் கணவன் தனது மனைவியைத் தவிர வேறு எந்தப் பெண்ணையும் தீண்டமாட்டான் என்பது உறுதிமொழி. இவ்விளக்கத்தின் அடிப்படையில், மூன்று முடிச்சுக்கள், மனைவியை அல்ல, கணவனையே கட்டுப்படுத்துகின்றன.

பெண்களுக்குக் கற்பு நெறியை வலியுறுத்தவந்த வேதநாயகம் பிள்ளை, "கற்பு நிலையே சிங்காரம் - அது தப்பினோர் அழகு சல அலங்காரம்" என்கிறார் அதாவது, "கற்பு என்ற அணிகலனால் தன்னை அழகுபடுத்தாது, வேறு ஒப்பனைப் பொருள்களால் தங்களை அழகு செய்யும் பெண்ணின் அழகு சவ அலங்காரம். அதாவது, செத்த பிணத்தை அழகுசெய்வது போன்றது" என்கிறார். ஒரு புவலர் தன் நண்பர் வீட்டில் விருந்துண்ட பின், நண்பரைப் பார்த்து, "உங்கள் மனைவி கற்புடையாள்" என்றார். மகிழ்ந்த நண்பரைப் பார்த்து மீண்டும் புலவர், உங்கள் மனைவி கற்புடையாள், அதாவது, அரிசியில் கிடக்கும் கற்களைப் புடைக்காதவள் (கல்புடையாள் - கற்புடையாள்) ஏனெனில் சோற்றில் நிறைய கல் இருந்தது" என்றார். புலவர். நண்பரின் முகம் சுருங்கிப்போய்விட்டது. நகைச்சுவையாகச் சொல்லப்படும் இது நமக்குச் சொல்லும் செய்தி - கற்பு கண்ணியமான ஒன்று என்பதாகும்.

ஒரே கிறிஸ்து, ஒரே திருச்சபை. அவ்வாறே, ஒரே கணவன், ஒரே மனைவி. அதே போன்று, கிறிஸ்தவத் திருமணங்கள் முறிவுபடாத் தன்மையை உறுதிசெய்கிறது. உண்மையான செல்லுநிலைத் திருமணம் மணமக்களிடையே பாலுறவில் முழுமை அடைந்துவிட்டது என்றால், அதன் பின் அத் திருமணத்தை மணமக்களோ அல்லது நீதிமன்றமோ முறிக்க முடியாது. கிறிஸ்தவத் திருமணங்கள் விவாகரத்துக்கு உட்பட்டவை அல்ல. மணமுறிவு (Divorce) என்பது கிறிஸ்தவ அகராதியில் இல்லை. உண்மைக் காதல் நிரந்தரமானது, நிபந்தனையற்றது, மாறத் தன்மை உடையது. மரணம் மட்டுமே திருமணத் தளையை முறிக்க வல்லது என்றாலும், உண்மைக் காதல் மரணத்திற்குப் பின்னும் நீடிக்கிறது என்பது நம்மவரின் கருத்தாகும். அதனால்தான், திருமணத்தை ஆசீர்வதிக்கும் குருவானவர் சொல்லும் ஜெபத்தில் "உங்களை எந்தச் சக்தியும் பிரிக்காதிருக்கட்டும்" என்று ஜெபிக்கிறார்.

ஒரு பெண் தன் கணவருடைய கல்லறையை விசிறிக் கொண்டிருந்தார். வித்தியாசமான அவரது செயலைக் கண்டவர்கள் காரணம் கேட்டபோது, "என் கல்லறை காயும் வரையிலாவது மறுமணம் புரியாமல் காத்திரு என்று என் கணவர் சொல்லிவிட்டு இறந்தார்" என்றார். என்னே அவளது பதிபக்தி! தன் கணவன் இறந்த பின் அவனது மனைவி மறுமணம் புரிந்துகொண்டாள். முதல் கணவனின் கல்லறையில் எரிந்துகொண்டிருந்த தீபத்தை அணைத்துவிட்டுப் பின்வருமாறு எழுதினாள். "நான் மற்றொரு தீபத்தை ஏற்றிக் கொண்டேன்"

கணவன் - மனைவி அன்பு மட்டுமன்று மற்ற எல்லா அன்பிற்கும் மூலமாக, இலக்கணமாக அமைந்துள்ளது இயேசு கிறிஸ்துவின் அன்பு. இயேசு இவ்வுலகிலிருந்த வரை, இறுதி வரை அன்புசெய்தார். (யோவா 13:1) அவர் விண்ணகம் சென்ற பின்னும் தம்மவருடன் என்றும் இருக்கிறார். "இதோ, நான் உலக முடிவுவரை எந்நாளும் உங்களோடு இருக்கின்றேன்" (மத் 28:20). அவர் தம்மவருடன் செய்த உடன்படிக்கை புதிய, நித்திய உடன்படிக்கை (லூக் 22:20). இயேசுவுக்கும் திருச்சபைக்கும் இடையே உள்ள உடன்படிக்கையை எவரும் எந்நாளும் பிரிக்கவோ, முறிக்கவோ முடியாது. அவ்வாறே, கணவனுக்கும் மனைவிக்கும் இடையேயுள்ள மண உடன்படிக்கைக்கு முறிவு இல்லை.

"கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும்" (மத் 19:6). சாமியார் இணைத்ததை மாமியார் பிரிக்காதிருக்கட்டும் என்பது மட்டுமல்ல, எந்தச் சக்தியும் பிரிக்காதிருக்கட்டும்....

**தொடர்ச்சி 15ம் பக்கம்**

# அர்ப்பண வாழ்வின் ஆண்டு

Conference of Major Religious Superiors of Sri Lanka (CMRS)

## இலங்கையில் பணியாற்றும் துறவற சபைகள் 01

## இயேசு சபை

இஸ்பானியா இராச்சியத்தில் உயர் குடும்பத்தில் பிறந்த இலோயாலா இஞ்ஞாசியார் சிறந்த போர்வீரனாக கருதப்பட்டார். பிரான்ஸ் நாட்டினருக்கும் இஸ்பானியா நாட்டினருக்குமிடையில் பம்பலோனாவில் ஏற்பட்ட போரின் போது இஞ்ஞாசியார் கடுமையான காயங்களுக்கு ஆளானார். பிரான்சு படைவீரர்கள் இஞ்ஞாசியாரின் வீரத்தினைக் கண்டு வியந்து அவரைக் காப்பாற்றினார்கள். இஞ்ஞாசியாரின் உடல் நலம் தேறி வரும் போது அவருக்கு வாசிக்கக் கிடைக்கப் பெற்ற இரு புத்தகங்களான "இயேசுவின் வாழ்க்கை வரலாறு", "புனிதர்களின் வாழ்க்கை வரலாறு" என்பன அவரின் வாழ்க்கையில் பெரும் மாற்றத்தினை ஏற்படுத்தியது. இம் மாற்றமானது இயேசு சபை உருவாக வழிவகுத்தது. சிலுவையின் அடியில் திருச்சபையின் பாதுகாப்பிற்காக போராடினார். இவ்வுலக வாழ்வின் இணைப்புகளிலிருந்து ஒரு மனிதனை எவ்வாறு கடவுளுக்கு உகந்தவராக மாற்ற முடியும் என்பது இங்கே குறிப்பிடத்தக்க விடயமாகும். இஞ்ஞாசியார் தனது மன மாற்றத்தின் பின் "அனைத்தும் இறைவனின் அதிமிக மகிமைக்கே" என்ற விருது வாக்கினை குறிக்கோளாக கொண்டு செயற்பட்டார். மேலும் கிறிஸ்துவோடு மிக நெருங்கிய உறவினை ஏற்படுத்திக்கொண்டு அவரது நெருங்கிய நண்பனாக விரும்பினார். அவ்வாறே இன்றும் இஞ்ஞாசியாரின் ஆன்மீகப் பயிற்சியில் வழிநடத்தப்படுகின்ற உலகெங்குமுள்ள இயேசு சபையினர் பிரார்த்தனையானது, இயேசுவை நன்கு அறிந்து, முழு மனதுடன் அன்பு செய்து உண்மையான கிறிஸ்தவர்களாக வாழ்வதாகும்.

இஞ்ஞாசியார் தனக்கேற்பட்ட கடவுளின் அனுபவத்தினை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ள பெரிதும் விரும்பினார். பரிசுத்த ஆவியானவரின் செயற்பாடுகளினை மக்கள் இலகுவில் புரிந்துகொள்ளும் விதமாக கற்பிப்பதற்கு ஆர்வமாக இருந்தார். இஞ்ஞாசியார் தனது தோழர்கள் கிறிஸ்துவின் வீரர்களாகவும் சிலுவையில் தொங்கிய இயேசுவோடு ஒன்றிணைந்து திருச்சபையினை பாதுகாப்பவர்களாகவும் இருக்க வேண்டுமென விரும்பினார். மேலும் உலகிற்கு ஒளியாக உலகின் இறுதி எல்லை வரை அனுப்பப்பட்ட இயேசு சபையினரிடையே எழும் கேள்விகளாவன:

*கிறிஸ்துவுக்காக நான் என்ன செய்தேன்?*

*கிறிஸ்துவுக்காக நான் என்ன செய்துகொண்டிருக்கின்றேன்?*

*கிறிஸ்துவுக்காக நான் என்ன செய்யப் போகின்றேன்?*

அருட்தந்தை ஜெரோம் நடால் அவர்கள் புனித இஞ்ஞாசியாரின் தனிபட்ட பிரதிநிதியாக பல வருடங்கள் சேவையாற்றினார். அருட்தந்தை ஜெரோம் நடால் அவர்கள் இயேசு சபை நடைமுறையினைக் குறித்துக் கூறியதாவது "தியான நிலையினை அடைவது, இறைவனை ஒவ்வொரு செயற்பாடுகளிலும் கண்டுகொள்ளல்" என்பதாகும்.

இஞ்ஞாசியாரினைப் பின்பற்றி செயற்படுகின்ற இயேசு சபையினர் "வந்து என்னை பின்பற்றுங்கள்" என்ற கிறிஸ்துவின் அழைப்பிற்குச் செவிமடுத்து அவர் வழி செல்பவர்களாவர். இயேசுவின் தோழர்களாகிய நாம் மனித பலவீனங்களோடு செய்யும் ஒவ்வொரு செயலிலும் இயேசுவினை வெளிப்படுத்துவதுடன் உலகெங்கும் சென்று இயேசுவின் அன்பினை வெளிப்படுத்த அழைக்கப்பட்டுள்ளோம். இயேசு சபையினர் இயேசுவை அறிந்து அவரினைப் பின்பற்றி சிலுவையை சுமப்பதனூடாக இயேசுவின் உயிர்ப்பின் மகிமையை அறிவிப்பது அவர்களின் பணியாகும்.

**தொகுப்பு:**
**அருட்தந்தை. சஞ்சீவ பெனான்டோ, யே.ச.**
**இயக்குநர், இயேசு சபை இளைஞர் மன்றம்,**
**அக்கரபனஹா, கிம்புளாபிட்டிய வீதி, நீர்கொழும்பு.**

## சில்வெஸ்ட்ரோ ஆசீர்வாதப்பர் சபை

### வரலாறு

ஆசீர்வாதப்பர் சபைகளின் வாழ்க்கை முறையானது கத்தோலிக்க சபையின் நவோதயத்தின் ஒரு சந்திஸ்தானம் என்று சொல்வதில் நான் பெருமிதம் கொள்கின்றேன். ஏனென்றால் வரலற்றிலே எம் தந்தையாகிய ஆசீர்வாதப்பர் பல்வேறுபட்ட புனைப்பெயர்களினால் அழைக்கப்பட்டதை கூறலாம். உதாரணமாக, "மேற்குலக துறவற சம்பிரதாயத்தின் பிதா" மற்றும் "ஐரோப்பாவின் தந்தை".

இச்சபையின் ஆரம்ப கர்த்தாவாக கருதப்படும் ஆசீர்வாதப்பர் கி.பி 480ஆம் ஆண்டு காலகட்டத்தில், தென் இத்தாலியின் நுர்சியோ என்னும் நகரில் செல்வந்த குடும்பமொன்றிலே பிறந்தார். இவர் தனது கல்வியை உரோமையில் பயின்றார் என்றும், அக்காலகட்டத்தில் அவருடைய சிந்தனையானது கல்வியைத் தவிர்ந்ததாக இருந்தது என்றும் ஆசீர்வாதப்பர் சபையினை சேர்ந்த திருத்தந்தை மகா கிரகோரியார் கூறுகின்றார். அவ்வாறு அவர் குறிப்பிட காரணம், அவர்கள் வாழ்ந்த சமூகமானது, ஏறியான்வாதம் மற்றும் நெஸ்டூரியன்வாதம் என்பனவால் வேரூன்றி காணப்பட்டது. இச்சூழ்நிலைகளின் இறுதி விளைவாக, ஆசீர்வாதப்பர் யாருக்கும் தெரியாமல் உலக நாட்டங்களில் இருந்து விலகி சந்தியாசியாக வாழ்வதற்காக சுபியாகோ என்னும் குகையினை நோக்கி பயணமானார்.

புனித பசில், புனித கேசியன் போன்ற மேற்குலக சிரேஷ்ட சந்நியாசிகளின் சம்பிரதாயங்களில் இருந்து பெற்றுக்கொண்ட அறிவினை, தன்னுடைய தனிப்பட்ட வாழ்க்கையின் அனுபவத்துடன் கலந்து, தன்னுடைய சக சந்நியாசிகளுக்கா கட்டுரையாக்கப்பட்ட நீதி ஒழுங்கானது, ஆசீர்வாதப்பரால் இவ்வுலகத்திற்கு அளிக்கப்பட்ட அளப்பெரும் பொக்கிஷமாக விளங்குகின்றது. அன்று சுபியாகோ குயைில் ஆரம்பிக்கப்பட்ட ஆசீர்வாதப்பர் துறவிகள் குடும்பத்தின் வெற்றியின் இரகசியமானது, இந்நீதி ஒழுங்கிலே காணப்படும் சரளத்தன்மை, பரிபூரணத்தன்மை மற்றும் செய்முறைத்தன்மை ஆகிய விடயங்களிலே தங்கியுள்ளது. இதன் விளைவாக கடந்த 15 நூற்றாண்டுகளாக இச்சபையில் இருந்து புனிதர்கள் 60,000 திருத்தந்தையர்கள் 50, பேரரசின் சக்கரவர்த்திகள் 30, அரசர்கள் மற்றும் 97 அரசிகளை இவ்வுலகத்திற்கு அளித்திருக்கின்றது. அன்று தொடக்கம் இன்று வரை ஆசீர்வாதப்பர் சபையானது ஒரு தாய்ச் சபையினை மையப்படுத்தி 25ற்கும் மேற்பட்ட துணைச்சபைகளை கொண்டதாக இருக்கின்றது. இவை ஒவ்வொன்றும் சுயாதீனமாக இயங்கி வருகின்றது.

புனித சில்வெஸ்டர் அடிகளார், ஆசீர்வாதப்பர் சபையின் உப சபைகளின் வரிசையிலே ஒன்றாக விளங்கும் "சில்வெஸ்டோ" ஆசிர்வாதப்பர் சபையின் ஆரம்பகர்த்தா ஆவார். இவரும் ஆசீர்வாதப்பரின் கால் அடிகளில் பயணம் செய்து, உலக நாட்டங்களை துறந்து, பப்ரியானோ பிரதேசத்தை அண்டிய வனமொன்றிற்கு சென்று சந்நியாச வாழ்வினைத் தொடங்கினார். இவ்வாறு சந்நியாச வாழ்க்கையை கடைப்பிடித்து வந்த எம் தந்தையை பார்த்த பலர் அவரை பின்தொடர ஆரம்பித்து, பிற்காலப்பகுதியில் அவரின் சீடர்களாகினர். இதன் விளைவாக சில்வெலஸ்டர், ஆசீர்வாதப்பருடைய நீதி ஒழுங்கை கடைப்பிடித்ததால், இச்சபினை ஆசீர்வாதப்பர் சபைகளில், சுயாதீனமுள்ள சபையொன்றாக, பரிசுத்த பாப்பரசர் இக்னேசியஸ் அவர்கள் கி.பி 1248இல் அனுமதித்தார். அன்று தொடக்கம் இன்று வரை ஆசீர்வாதப்பரின் நீதி நூலையும், அவரால் பயன்படுத்தப்பட்ட மறைத்துறவு ஆடையையும் பயன்படுத்தி, தினம் தினம் வளர்ச்சிப்பாதையில் வீறு நடை போடுகின்றது.

### *இலங்கை வருகையும் அங்கு மேற்கொள்ளப்பட்ட பணிகளும்*

கி.பி 1845ஆம் காலப்பகுதிவரை சில்வேஸ்ட்ரோ ஆசீர்வாதப்பர் சபையின் சேவைகள் இத்தாலி நாட்டிற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதாக காணப்பட்டது. எனினும் தர்மதூது பணிக்காக, சந்நியாச அருட்தந்தையர்கள், வெளிநாடுகளை நோக்கிச் செல்ல எடுத்த முடிவின் அடிப்படையில் கி.பி 1845 ஆவணி மாதம் 14ஆம் திகதி எம் தாய்நாட்டை நோக்கி வந்து கொண்டிருந்த சில்வேஸ்ட்ரோ ஆசீர்வாதப்பர் சபையின் சந்நியாசிகள், அருட்தந்தை ஜோசப் மரிய பிறாவி (பு. ஆ.ச) தலைமையில் இந்த புனித பூமியில் கால் பதித்தனர். இதன் முக்கிய நோக்கம், இலங்கை தேசத்தில் மறைப்பணியின் அறுவடையை பெருகச் செய்வதே ஆகும்.

அக்காலகட்டத்தில் இலங்கை திருச்சபையில் இருந்த சிரேஸ்டர்களால் ஆசீர்வாதப்பர் சந்தியாசிகளுக்கு தென் மறைமாவட்டத்தில் சேவைப்புரிய அனுமதி வழங்கப்பட்டது. இதன் பயனாக இவர்கள் சிலாபம் முதல் காலி வரை தங்கள் சபையை வியாபித்தனர். இலங்கை கத்தோலிக்க சபையின் வளர்ச்சிக்காக ஆலயங்கள், பாடசாலைகள் போன்றவற்றினை நிர்மாணித்ததுடன் ஏழை, எளிய மக்களுக்கு கிறிஸ்துவின் நற்செய்தியை பறைசாற்றினர். இதனால் இலங்கை திருச்சபை புதுப்பிறப்படைந்தது.

பிற்காலத்தில் அதி வண மரிய பிறாவி (பு.ஆ.ச) அடிகளார் ஆயர்பணிக்கும் மேலுயர்த்தப்பட்டார். அவரை தொடர்ந்து வந்த அதி. வண ஹிலேரியன் சில்லாணி (பு. ஆ. ச) அடிகளாரின் யுகமானது இலங்கை கத்தோலிக்க வரலாற்றில் ஒரு சுவர்ணமயமான பகுதியாக அமைந்தது. அது மாத்திரமன்றி இலங்கையின் முதலாவது சிங்கள பத்திரிகையாக அமைந்த ஞானார்த்த பிரதீப்பய, அதி. வண ஹிலேரியன் சில்லாணி அடிகளாரின் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டதாக கருதப்படுகின்றது.

சுமார் 40 வருடங்களுக்கும் கிட்டிய காலப்பகுதியில், விலைமதிக்க முடியாத பல சேவைகளை தென் மாகாண கத்தோலிக்கர்களுக்கு செய்த பின்பு, ஆசீர்வாதப்பர் சந்நியாசிகள் மலையக மக்களின் மறைத்தாகத்தை நிவர்த்தி செய்யும் பொருட்டு கண்டி (செங்கடல்) பகுதிக்கு வருகைத்தந்தனர். அன்று தொடக்கம் இன்று வரை கண்டி மறைமாவட்டத்தை தங்களின் மையமாக கொண்டு பல பணிகளை இலங்கை திருச்சபைக்கு எந்த வித பிரதி பலனும் பாராமல் செய்துவருகின்றனர். கண்டி மறைமாவட்டமானது சுதேச குருக்களிடம் கையளிக்கும் முன்பு, ஆசீர்வாதப்பர் சபையினை சேர்ந்த பல ஆயர்களின் வழிநடத்தலுடன் வளர்த்தெடுக்கப்பட்டது. உதாரணமாக, மேதகு க்லமன்ட் பஞ்ஞானி ஆண்டகை (பு. ஆ. ச) மேதகு பீடு பிக்கியர் ஆண்டகை (பு. ஆ.ச) மேதகு பெர்னார்ட் ரங்க்சோ ஆண்டகை (பு.ஆ.ச) மேதகு லியோ நாணயக்கார ஆண்டகை (பு.ஆ.ச) நிகழ்காலத்திலே மேதகு கிளிட்டஸ் சந்திரசிறி பெரேரா ஆண்டகை (பு.ஆ.ச) இரத்தினப்புரி மறைமாவட்டத்தின் ஆயராக பணிபுரிகின்றார்.

### *ஆசீர்வாதப்பர் சபையினால் இலங்கை கத்தோலிக்க திருச்சபைக்கு அளிக்கப்பட்ட மறையாத நினைவுச்சின்னங்கள்*

**01. பேராலயங்கள்**

- தூய லூசியாள் பேராலயம், கொழும்பு
- தூய மரியாள் பேராலயம், பதுளை
- தூய மரியன்னை பேராலயம், காலி,
- புனித அந்தோனியார், பேராலயம், கண்டி

**02. பாடசாலைகள்**

- புனித சவேரியார் கல்லூரி, நுவரெலியா.
- புனித தோமையார் கல்லூரி கோட்டை
- புனித சில்வெஸ்டர் கல்லூரி கண்டி

**03. சிற்றாலயங்கள்**

- புனித பிலிப்பு புறக்கோட்டை.
- புனித சில்வெஸ்டர் (இன்று புனித அந்தோனியார்) கல்கிஸ்சை.
- புனித ஆசீர்வாதப்பர் மடம்பெல்ல.
- புனித சூசையப்பர் பமுனுகம.
- புனித சூசையப்பர், கிரான்பாஸ்.
- புனித மரியாள் மட்டக்குளி.
- பெரிய சந்தியாகு, முகத்துவாரம்.
- ஸ்நாபக அருளப்பர் மற்றும் அந்திரேயா முகத்துவாரம்.
- புனித சில்வெஸ்டர் ஏத்துகாளை.
- புனித ஊகோ புருளபிடிய.
- புனித மரியாள் துடெல்ல.
- புனித அந்தோனியார் வஹாக்கோட்டை.
- திருஇருதயநாதர் ஆலயம் இராஜகிரிய.
- புனித செபஸ்தியன் பருதேள்போல.
- புனித லூர்து அன்னை தங்கமலை.

### *எமது சபையின் விருதுவாக்கு தனிவரம் தூரநோக்கு மற்றும் இலக்கு*

**விருதுவாக்கு** : செபம் மற்றும் வேலை

**தனிவரம்** : நாம் தனிமை, குடும்ப வாழ்வு மற்றும் அப்போஸ்தலிக்க சேவைகளை ஊடாக இறைவனைத் தேடல்

# பாலியல் முறைகேடுகள் திரு அவையில் இருந்து வேரறுக்கப்பட வேண்டும்.






திருச்சபையின் ஆயர்களே, துறவுசபை தலைவர்களே, பணி நிறுவனப் பொறுப்பாளர்களே, பாலியல் முறைகேடுகளிலிருந்து குழந்தைகளையும், சிறுவர் சிறுமியரையும் பாதுகாப்பது எமது கடமை என்றும் குடும்பங்களில் நம்பிக்கையை உருவாக்குங்கள். இதற்கான அனைத்து முயற்சிகளையும் திருச்சபை மேற்கொண்டு வருகிறது என்று கூறுங்கள். சிறுவர் சிறுமியர் பாதுகாப்பிற்கென உருவாக்கப்பட்டுள்ள திருப்பீட அவையுடன் உலகின் உள்ள அனைத்து கத்தோலிக்க மறைமாவட்டங்கள், துறவு சபைகள், மற்றும் அனைத்து பணி நிறுவனங்களும் இதற்கு ஒத்துழைக்க வேண்டும். என்று 05.02.2015 அன்று திருத்தந்தை மடல் ஒன்றை வெளியிட்டார்.

சிறுவர் சிறுமியர் பாதுகாப்பிற்கென கடந்த சில ஆண்டுகளாக கத்தோலிக்க திருச்சபை மேற்கொண்டுவரும் பல்வேறு முயற்சிகளை இம்மடலில் சுட்டிக்காட்டியுள்ள திருத்தந்தை, பாலியல் தொடர்பான முறைகேடுகள் திருச்சபையிலிருந்து முற்றிலும் வேரறுக்கப்பட வேண்டும் என்று ஆணித்தரமாக எடுத்துரைத்துள்ளார். பாலியல் தொடர்பான முறைகேடுகளால் பாதிக்கப்பட்டோருக்கு நீதி கிடைக்கவும், அவர்களுக்குத் தேவையான ஆதரவுகளை வழங்கவும் திருச்சபைத் தலைவர்கள், துறவுச் சபைத் தலைவர்கள், பங்கு அருள் பணியாளர்கள் அனைவரும் அக்கறையுடனும், கனிவுடனும் செயல்பட வேண்டும் என்று திருத்தந்தை இம்மடலில் விண்ணப்பித்துள்ளார்.

# ஐந்து இறையடியார்கள் முத்திப்பேறு பெற்ற நிலைக்கு உயர்த்தப்படுவதற்கு திருத்தந்தை ஒப்புதல்



சான் சால்வதோர் மறைசாட்சி பேராயர் ஆஸ்கார் ரொமேரோ உட்பட ஐந்து இறையடியார்களை முத்திப்பேறு பெற்ற நிலைக்கு உயர்த்துவதற்கு இசைவு தெரிவித்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். மத்திய அமெரிக்க நாடான எல் சால்வதோரின் Ciudad Barrios என்ற ஊரில் 1917ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ஆம் திகதி பிறந்த, சான் சல்வதோர் பேராயர் Oscar Arnolfo Romero Galdamez அவர்கள், கிறிஸ்தவ விசுவாசத்திற்காக 1980ஆம் ஆண்டு மார்ச் 24ஆம் திகதி திருப்பலி நிறைவேற்றிக்கொண்டிருந்தபோது சுட்டுக்கொல்லப்பட்டார். சால்வால்வதோரில் 1980ஆம் ஆண்டு முதல் 1992 ஆண்டுவரை நடந்த உள்நாட்டுப் போரின்போது இராணுவத்தின் அடக்குமுறைகளுக்கு எதிராகப் பொதுப்படையாக கண்டித்துப் பேசியவர் பேராயர் மொரேரோ, பேராயர் ரொமேரோ அவர்கள் குறித்த விபரங்கள் கடந்த 04ஆம் திகதி புதன்கிழமையன்று வெளியிடப்பட்டன. மேலும் தென் அமெரிக்க நாடான பெருவில் 1991ஆம் ஆண்டு ஆகஸ்ட் 09ஆம் திகதிக்கும் 25க்கும் இடைப்பட்ட நாள்களில், மறைமாவட்ட அருள்பணியாளர் Alessandro Dordo, பிரான்சிஸ்கன் சபையின் அருள்பணியாளர்கள் Michele Tomaszed, sbigneo Strzalkowski ஆகிய மூவரும் கிறிஸ்தவ விசுவாசத்துக்காக மறைசாட்சிகளாகக் கொல்லப்பட்டனர்.

இன்னும் இத்தாலியின் Bisacquinoவில் 1880ஆம் ஆண்டு ஆகஸ்ட் 12ஆம் திகதி பிறந்த இறையடியார் அருள்பணியாளர் Giovanni Bacile அவர்கள் 1941ஆம் ஆண்டு ஆகஸ்ட் 20ஆம் திகதி இறந்தார். இவரது வீரத்துவமான வாழ்வையும் ஏற்று முத்திப்பேறு பெற்ற நிலைக்கு உயர்த்துவதற்கு ஒப்புதல் தெரிவித்தார் திருத்தந்தை.

புனிதர் நிலைக்கு உயர்த்தும் திருப்பேராயர் தலைவர் கர்தினால் Angelo Amato அவர்களை கடந்த 03ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திருப்பீடத்தில் சந்தித்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இந்த ஐந்து இறையாடியார்களை முத்திப்பேறு பெற்ற நிலைக்கு உயர்த்துவதற்கு ஒப்புதல் தெரிவித்தார்.

# நற்செய்தியை தினமும் வாசியுங்கள் / தியானியுங்கள்



தொலைக்காட்சியைப் பார்ப்பதில் அல்லது பிறர் பேசும் புறணிகளைக் கேட்டுக்கொண்டிருப்பதில் நேரத்தை வீணாக்காமல் ஒவ்வொரு நாளும் பத்து நிமிடங்கள் நற்செய்தியை எடுத்து வாசிக்குமாறு விசுவாசிகளைக் கேட்டுக்கொண்டார் திருத்தந்தை பிரான்சிஸ்.

வத்திக்கானில் தான் தங்கியிருக்கும் சாந்தா மார்த்தா இல்லச் சிற்றாலயத்தில் திருப்பலி நிறைவேற்றிய திருத்தந்தை அவர்கள், எபிரேயருக்கு எழுதப்பட்ட (எபி 12:1-4) வாசகத்தை அடிப்படையாகக் கொண்டு மறையுரை ஆற்றி, நற்செய்தியை தினமும் தியானிப்பது இயேசுவின் உண்மையான நம்பிக்கை வைப்பதற்கு நமக்கு உதவுகின்றது என்று கூறினார்.

இயேசுவின் மீது நம் கண்களைப் பதிப்பது நம்பிக்கையின் மையமாக உள்ளது என்றும், தினமும் செபமாலை செபிப்பது, பிரச்சினை இருக்கும்போது நம் ஆண்டவருடன் அல்லது நம் அன்னை மரியாவிடம் அல்லது புனிதர்களிடம் பேசுவது நல்லது, ஆனால் அன்றாட தியானம் முக்கியம், இது நற்செய்தியை நம் கையில் வைத்துக் கொள்வதாலே இயலும் என்றும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ். அன்றாடம் வாசிக்கும் நற்செய்திப் பகுதியிலிருந்து எப்படி தியானிப்பது என்பதையும் மறையுரையில் விளக்கிய திருத்தந்தை, பன்னிரு ஆண்டுகளாய் இரத்தப்போக்கினால் வருந்திய பெண் குணமடைந்தது, தொழுகைக்கூடத் தலைவர் யாயீர் என்பவரின் மகளுக்கு உயிரளித்தது (நற்செய்தி வாசகம் மாற்கு 5:21-43) ஆகிய பகுதிகளை எவ்வாறு தியானிப்பது என்பதையும் எடுத்துச் சொன்னார்.

தியானத்துடன் செபிப்பது நாம் நம்பிக்கையில் வளர உதவுகின்றது, தினமும் வீட்டில் நற்செய்தியில் ஒரு பகுதியை எடுத்து 15 நிமிடங்கள் வாசித்து அதனைக் கற்பனை செய்து, அது பற்றி இயேசுவோடு பேசமாறு கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

# பயிரிடுதல் இல்லாமல் மனித சமுதாயம் இல்லை



இத்தாலியின் தேசிய கூட்டமைப்பு உருவாக்கப்பட்டதன் எழுவதாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு 200 பிரதிநிதிகளை சந்தித்தார் திருத்தந்தை. அங்குத் திருத்தந்தையின் உரையில் மனித வாழ்வில் வேளாண்மை மிக முக்கியமான பங்கை வகிக்கின்றது. வறுமை, மற்றும், பசி, நிலத்தைப் பயிரிட்டுப் பாதுகாத்தல் பற்றி கூறினார்.

திருத்தந்தை இப்பூமியின் நலன்கள் அனைவருக்கும் பொதுவானவை. என்று 2ஆம் வத்திக்கான் சங்கம் கூறுகிறது. ஆனால் இக்காலத்தில் ஆதிக்கம் செலுத்தும் பொருளாதார அமைப்பு, இவ்வளிப்பை சரியாக பயன்படுத்தவில்லை. சந்தை விதிகளை முழுமையாக்குதல், வீணாக்கும் கலாச்சாரம், உணவை கவலையின்றி வீணாக்குதல் போன்றவை பல குடும்பங்களுக்குத் துன்பத்தையும், கவலையையும் வருவிக்கின்றன.

# அனைத்து கிறிஸ்தவ சபைகளும் ஒன்றிணைந்து சாட்சி பகர அழைப்பு

கத்தோலிக்கத் திருச்சபை மற்றும் கீழை வழிபாட்டு முறை ஆர்த்தடாக்ஸ் சபைகளுக்கு இடையே இறையியல் உரையாடல் நடத்தும் பன்னாட்டுக் குழுவின் பிரதிநிதிகளை 30.01.2015 வெள்ளிக்கிழமையன்று திருப்பீடத்தில் சந்தித்து உரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்.

அனைத்துக் கிறிஸ்தவர்களும் ஒருவரையொருவர் ஏற்று ஒருவர் ஒருவர் மீது நம்பிக்கை வைத்து அமைதி மற்றும் நீதி சார்ந்த விவகாரங்களில் ஒன்றிணைந்து பணிபுரிய அழைக்கப்பட்டுள்ளனர்.

இக்காலத்தில் மத்திய கிழக்கில், குறிப்பாக, ஈராக்கிலும் சிரியாவிலும் தொடர்ந்துகொண்டே இருக்கும் துன்பம் நிறைந்த சண்டைகளால், சொல்லமுடியாத கடும் இன்னல்களை எதிர்கொள்ளும் நம் கிறிஸ்தவ சகோதர சகோதரிகள் உட்பட பல புனிதர்களையும் நினைத்துப் பார்ப்பதாக தெரிவித்த திருத்தந்தை, மத்திய கிழக்கின் பிரச்சினைகள் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்படுவதற்குச் செபிப்போம் எனக் கூறினார். மத்திய கிழக்கில் நடந்துகொண்டிருக்கும் நிகழ்வுகள், மிகுந்த கவலையையும், வேதனையையும் தருகின்றன என்றும் கூறிய திருத்தந்தை, அனைத்து கிறிஸ்தவ சபைகளிலும் வீரத்துவமான சான்று பகர்ந்த பல மறைசாட்சிகள் மற்றும் புனிதர்களின் வாழ்வு கிறிஸ்தவ சமூகங்களை

தொடர்ச்சி 15ம் பக்கம்

## 01ம் பக்கம் — உலகமயமாக்கப்பட்டுள்ள

கிறிஸ்து நமக்குப் பணிவிடை புரிய அனுமதிப்பதன் மூலம் நாமும் அவர்போல ஆகிறோம். இறைவார்த்தையைக் கேட்கும்போதும், அருளடையாளங்களை குறிப்பாக, திருநற்கருணையைப் பெறும்போதும் இது நம்மில் நடைபெறுகின்றது. இவ்வுலகில் வாழும் நாம் ஒருவர் மற்றவரைப் புறக்கணித்து வாழ இயலாது என்றும் கூறியுள்ளார் திருத்தந்தை.ஒன்றிணைந்து செபிப்பதால் கிடைக்கும் நன்மைகளையும் குறிப்பிட்டுள்ள திருத்தந்தை வருகிற மார்ச் 13, 14ஆம் திகதிகளில் உலகின் அனைத்து மறைமாவட்டங்களிலும் கடைப்பிடிக்கப்படும் 24 மணி நேர செப முயற்சி பிறரன்புச் செயல்களைச் செய்யத் தூண்டும் என்ற தனது நம்பிக்கையையும் வெளியிட்டுள்ளார். கருணை நிறைந்த இதயம் பலவீனமானது என்று அர்த்தமல்ல, மாறாக அது உறுதியான மற்றும் வலுவான இதயம், சோதிப்பவனை விரட்டி, இறைவனுக்குத் திறந்த மனதுடையதாக அது இருக்கும் என்று தனது தவக்காலச் செய்தியில் கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

இம்மாதம் 18ஆம் திகதி தொடங்கும் இவ்வாண்டின் தவக்காலம் உங்கள் உள்ளங்களை உறுதிப்படுத்துங்கள் (யாக் 5,8) என்ற தலைப்பை மையமாகக் கொண்டிருக்கின்றது என்றார்.

## 01ம் பக்கம் — திருத்தந்தை இலங்கை...

அதற்கு முன்னதாக அவர் தனது உத்தியோகப்பூர்வ ருவிட்டர் தளத்தில் "இறைவன் இலங்கையை ஆசீர்வதித்துக் காப்பாராக" என்று தமிழ் மொழியில் ஆசிச் செய்தி ஒன்றை பதிவு செய்துள்ளார். அச்செய்தி சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது. முதன் முதலில் திருத்தந்தை ருவிட்டர் செய்தியில் தமிழ் மொழியில் ஆசியை வழங்கியது இதுவே முதற் தடவையாகும்.

## 03ம் பக்கம் — புனித பிரான்சிஸ்

**செபம் :** செபம் ஒரு உறவு நிகழ்ச்சி, படைத்தவராகிய கடவுளுக்கும், படைப்பாகிய நமக்குமிடையேயான உறவைப் புதுப்பிக்கும், பலப்படுத்தும், பயனளிக்கச் செய்யும் செயல். செபம், தனிச் செபம், பொதுச் செபத்தின் மூலமாக கடவுளருளைப் பெற்று ஆண்டவரோடும், அயலவரோடும் அன்பு உறவு வாழ்வு வாழ வேண்டும்.

**பகிர்வு :** தர்மம் என்றால் நம்மிடம் உள்ள ஒரு பகுதியை, நமக்குத் தேவையில்லாததை பிறருக்குத் தருவது. உதாரணம் - பழைய சோற்றைக் கொடுப்பது அல்ல, மாறாக பகிர்வு என்பது நமக்கென்று, நமது பயன்பாட்டிற்கென்று வைத்திருப்பதை பிறருக்கு தருவது இதில் அன்பு அடங்கியுள்ளது.

**நமது நேரம் :** உழைப்பு கரிசனை, பாசம், அன்பு ஆகியவற்றை தேவையானவர்களோடு பகிர்ந்து கொள்வதே உண்மையான பகிர்வு, நாம் நம்மிடம் உள்ளதை மட்டுமல்ல நம்மையே பிறருக்குக் கொடுக்க வேண்டும்.

## 05ம் பக்கம் — தேவநற்கருணை...

ஞாயிறு ஓய்வுநாள்

கடவுள் வேலை செய்ததன் பின் 7ம் நாள் ஓய்வெடுத்தார் எனச் சொல்கிறது திருவிவிலியம். கடவுள் ஓய்வு எடுத்தார் என்பதன் மூலம் இஸ்ரயேல் மக்கள் சாபாத் எனும் ஓய்வுநாளை அனுசரிக்க வேண்டுமென அறிவுறுத்தப்படுகின்றனர்....

ஓய்வெடுப்பதன் நோக்கம் என்ன? இறைவனை வழிபடவும், செபத்தில் ஈடுபடவும், குடும்ப உறவை ஆழப்படுத்தவும், மனைவி - கணவன், பெற்றோர் - பிள்ளைகளோடு நேரம் செலவிடவும், பிறரன்புப் பணிகளில் ஈடுபடவும் நாம் ஓய்வெடுக்கின்றோம்.

நாமும் தொடக்ககால இறைமக்களைப் போல ஆர்வத்தோடு ஞாயிறு திருப்பலியில் பங்கேற்போம். கடமையாகவோ, கட்டளையாகவோ அல்ல மாறாக, ஆண்டவரின் நாளின் மாண்பை, மகத்துவத்தை அதன் உட்பொருளை உணர்ந்து, ஞாயிறு திருப்பலியில் பங்கேற்போம்.

## 14ம் பக்கம் — அனைத்து கிறிஸ்தவ

உறுதிப்படுத்த கிறிஸ்து உதவுவாராக என்றும் கூறினார் திருத்தந்தை. கத்தோலிக்கரையும், கீழை வழிபாட்டுமுறை ஆர்த்தடாக்ஸ் சபையினரையும் கொண்ட இந்தப் பன்னாட்டுக் குழுவின் இறையியல் உரையாடல், இவ்விரு சபைகளுக்கு இடையே உடன்பிறப்பு நட்பை வளர்க்க உதவும் என்ற தனது நம்பிக்கையையும் வெளியிட்டார் திருத்தந்தை.

## 12ம் பக்கம் — மன ஒன்றிப்பும்

இப்படி ஆசீர்வதிக்கப்பட்ட நிலையிலும் "ஒருவன் தனது நிலையிலிருந்து தவறிவிட்டால் அவன் தலையிலிருந்து கீழே விழுந்துவிட்ட முடிவுக்குச் சமம்" என்கிறார் வள்ளுவர். தன் நிலையிலிருந்து தடம் புரண்டவர்களை விவேக சிந்தாமணி விரிவாக விளக்குகிறது. அதாவது, தாமரைப்பூ தண்டோடு இணைந்திருக்கின்ற நிலையில், கீழே தண்ணீர் அதற்குத் தாயாக இருந்துஅதைத் தாங்கிக் கொண்டிருக்கிறது. மேலே சூரியன் அதற்குத் தந்தையாக இருந்து அதை இதழ் விரியச் செய்கிறது. ஆனால், தாமரை மலரை அதன் தண்டிலிருந்து கொய்துவிட்டால் தண்ணீர் அதை அழுகி நாற்றமடிக்கச் செய்கிறது. சூரியன் அதைக் காய்ந்து கருகிப்போகச் செய்கிறது. நிலை தவறியவர்களின் கதியும் அதே கதிதான்.

அழகான உவமை, அழகான தத்துவம். இக்கருத்தை விளக்கவந்த விவிலியம் தனது நிலையிலிருந்து தவறியவரைச் சாரமற்றுப்போன, காலால் மிதிக்கப்பட வேண்டிய உப்பிற்கு ஒப்பிடுகிறது (மத் 5:13)

## 13ம் பக்கம் — புனித சில்வெஸ்ட்ரோ

**தூரநோக்கு :** கத்தோலிக்க சேவைகள் மூலமாக இறைவனைத் தேடல்

**இலக்கு :** செபம், வேலை மற்றும் குடும்ப வாழ்க்கையின் மூலம் நற்செய்தியின் மகிழ்ச்சியை இறை மக்கள் மத்தியில் கொண்டு செல்லல்.

### *நிகழ்காலத்திலே நாம் புரிகின்ற அப்போஸ்தலிக்க சேவைகள்*

நிகழ்காலத்தில், உலகளாவிய ரீதியில் புனித ஆசீர்வாதப்பர் சபையில் சுமார் 20,000 சந்தியாசிகளும் கன்னியாஸ்திரிகளும் இருக்கின்ற அதேவேளை, எம் தாய்நாட்டில் சுமார் 50 சந்தியாசிகள் புனித சில்வெஸ்ரோ ஆசீர்வாதப்பர் சபையில் அங்கத்தவர்களாக உள்ளனர். இவர்கள் பல்வேறுபட்ட அப்போஸ்தலிக்க பணிகளை இலங்கைத் திருச்சபையின் அபிவிருத்திக்காக செய்துவருகின்றனர். இவைகள் பின்வருமாறு

**01. பங்குச் சேவைகள்:** இராஜகிரிய, வஹாக்கோட்டை, தொடுவாவ, இதல்கஸ்ஹின்ன, அம்பாறை

**பாடசாலைகள்**

புனித அந்தோனியார் கல்லூரி கட்டுகஸ்தோட்ட, புனித ஆசிர்வாதப்பர் தேசிய கல்லூரி அம்பிட்டிய, இதனைத்தவிர்ந்து உயர் கல்வி நிலையங்களில் கற்பித்தல், பட்டப்படிப்பு, வெளிநாடுகளில் மறைப்பணி சேவைகள், ஞான ஒடுக்க நிலையங்கள், செப அப்போஸ்தலிக்க சேவை போன்ற பலவிதமான சேவைகளை எமது தேவ அழைத்தலின் மூலமாக புரிந்து வருகின்றோம்.

நீங்களும் எமது குடும்பத்தைப் பற்றிய மேலதிக விபரங்களை தெரிந்துகொள்ள அல்லது அதனை பார்த்து தெரிந்து கொள்ள அழையுங்கள் (081 - 2223684) (வண. சிரேஷ்ட அருட்தந்தை பு. சில்வெஸ்டர் குருமடம், மொண்டே பானோ, அம்பிட்டிய

## 08ம் பக்கம் — எமது தலைமை...

இருந்தாலும்கூட சில சந்தர்ப்பங்களில் நானும்கூட பல்வேறு தாக்குதல்களுக்கு மத்தியில் சில வேளைகளில் தனிப்பட்ட முறையிலும் குழப்பமடைந்தவராகவும் இருந்தேன். ஆண்டவரே நீர் எங்கிருக்கின்றீர் என்ற கேள்வி எழுந்தது. எப்படியாயினும்நாம்நம்பிக்கையுடனும்இறைவனிடமும் எமது புனிதர் யோசவ் வாஸ் அவர்களிடமும் எம் எதிர்பார்ப்பினை ஒப்படைத்தவர்களாக இருந்தோம். இந்த நம்பிக்கையானது எமக்கு ஏமாற்றமளிக்கவில்லை. தேர்தலும் ஆட்சி மாற்றமும் முற்றிலும் சமாதானமாகவே நடைபெற்றதுடன் சுதந்திர இலங்கையில் மிக சமாதான ஆட்சி மாற்றமாக எமது அரசியல் வரலாற்றில் இடம் பெற்றது. இவ்வாறு எமது செபத்தினை ஆண்டவர் செவிமடுத்தார். அதாவது பாப்பரசரின் விஜயமும் புனிதராக்கும் வைபவமும் ஒரு மறக்கமுடியாத அனுபவமாக இருப்பதுடன் இறைவன் ஒரு சமாதானமான தேர்தலும் ஆட்சி மாற்றமும் நிகழ்செய்து ஒரு புதுமையை ஆற்றினார். அவர் உண்மையிலேயே பெரியவர். அவர் பெயர் போற்றப்படக்கடவதாக.

அன்புநிறை சகோதர, சகோதரிகளே, நாம் அனைத்திற்கும் இறைவனுக்கு நன்றி கூறுவோமாக. அவரது ஆசிகளுக்காகவும், அவர் திருத்தந்தை பிரான்சிஸ் வழியாக அவர் நம்மைத் தம் மந்தையாகத் தொட்டமைக்காகவும், நமது விண்ணகப் பரிந்துரையாளரான புனித யோசவ் வாஸ் அவர்களுக்காகவும் நன்றி கூர்வோமாக. உரோமையின் திருச்சபையினராக இருப்பதற்காகவும் அப்போஸ்தலர்களினதும் மறைசாட்சிகளினதும் விசுவாசத்தின் உரிமையாளர்களாக இருப்பதற்காகவும் நன்றி கூர்வோமாக.

## ஹலோ ஹலோ ...!

செல்போன் பயன்பாட்டிலும் விற்பனையிலும் உலகம் வெகுவாக முன்னேறிக் கொண்டுள்ளது. சமுதாயத்தின் கீழ்மட்டத்திலுள்ள வசதியற்றவர்களும் செல்போனைப் பயன்படுத்தி வருகின்றனர். கிராமங்களும் இதற்கு விதிவிலக்கல்ல. சிலர் போதைப் பழக்கத்திற்கு அடிமையாவதுபோல பலர் செல்போனுக்கு அடிமையாகியுள்ளனர். செல்போன் பயன்பாட்டினாலும், செல்போன் கோபுரங்களாலும் பல்வேறு தீமைகள் மக்களுக்கு ஏற்படுகின்றன என்பதை பலர் அறிந்திருந்தாலும், செல்போன் பயன்படுத்துவதை அவர்களால் குறைக்க முடியவில்லை,

தொடர்ந்து செல்போன் பயன்படுத்துவதால் கேன்சர், மூளைக்கட்டி, பார்வைக் குறைவு கேட்கும் திறனிழப்பு, நினைவிழப்பு, போன்ற கெடுதல்கள் ஏற்படுகின்றன. செல்போனில் பாட்டுக் கேட்டுக் கொண்டும் பேசிக்கொண்டும் இரயில் தண்டவாளத்தில் நடந்து உயிரை இழப்பவர்கள் பற்றி அவ்வப்போது பத்திரிகைகளில் வாசிக்கின்றோம். போதையில் வண்டி ஓட்டுபவர்களைப்போல, செல்போன் பேசிக்கொண்டு வண்டி ஓட்டுபவர்களாலும் மக்களுக்கு உயிரிழப்பு ஏற்படுகின்றது. செல்போன் ஸ்பீக்கரை தொடர்ந்து பயன்படுத்துவதால் காது மடல்களிலுள்ள சிறு சிறு நரம்புகள் பாதிப்படைகின்றன. இதனால் சிறுவர்களுக்குக் கேட்கும் திறன் இழப்பு ஏற்படும்.

செல்போனை காதின் அருகே வைத்துப் பேசிக் கொண்டிருக்கும் போது செல்போன் சூடாகி அதிலிருந்து வரும் கதிர் வீச்சுக்களால் மூளை பாதிக்கப்படுகின்றது. கர்ப்பிணிகள் தொடர்ந்து செல்போனில் பேசும்போது கருவிலுள்ள குழந்தைகளுக்குப் பாதிப்பு ஏற்படுகின்றது.

நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்துவது நல்லதுதான். ஆனால் அதைப் பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகள் அறிந்து அதற்கேற்ப நம்மை நாம் காத்துக் கொள்வது சிறந்தது.

### சென்ற இதழில் (01.02.2015) இடம் பெற்ற இயேசுவுக்கே புகழ் என்னும் கட்டுரையின் பிரசுரிக்கப்படாத மிகுதி

நான் இதிலிருந்து கூற வருவது என்னவென்றால் இன்றைய சமுதாயம் நவீன உலகப் பாதையில் சீரழிந்து கொண்டு போகிறது. அதை விட்டுவிட்டு நம் ஆண்டவர் இயேசு கற்பித்த வழியில் செல்ல வேண்டும் என கூறுகிறேன். முடிந்தளவு செபமாலை சொல்லுங்கள். எனது வாழ்வில் கண்ட அனுபவங்கள் மூலம் நான் கூறுகிறேன். புனித மரியன்னையினதும் புனிதர்களினதும் பரிந்துரை எமக்காக இறைவனை சென்றடைகிறது. என் வாழ்வில் இன்று சில அற்புதங்கள் நடைபெற்று இருக்கின்றன. அவற்றை நான் உங்களோடு இனிவரும் நாட்களில் பகிர்ந்து கொள்வேன். நம் ஆண்டவர் இயேசு ஒருவரே உண்மையான கடவுள் என்பதை நான் உணர்கின்றேன்.

இயேசுவுக்கே புகழ், இயேசுவுக்கே நன்றி
மரியே வாழ்க

The True form of penanance is to put up with all pain and to abstain from injury.

உற்ற நோ் தோன்றல் உறுகண்செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு (திருக்குறள்)

**பொருள் :** தன் நோய் பொறுத்தலும், பிற உயிர்க்கும் துன்பம் செய்யாமையுமே தவமாம்


## மணமகள் தேவை



கொழும்பு இந்திய வம்சாவளி R.C வயது 32 உயரம் 5' 6" சொந்த வியாபாரம் செய்யும் மனமகனுக்கு பெற்றோர் தகுந்த வரனை எதிர்பார்க்கின்றனர். ஆசிரிய தொழில் விரும்பத்தக்கது தொடர்பு 0779327766

# ஹொரனை கல்வாரி திருத்தலம் 2015

## கருப்பொருள் : இயேசுவே நான் உன்னை அன்புசெய்கின்றேன்



**தவக்கால நிகழ்வுகள் :**

**விபூதிப்புதன் மாசி மாதம் 18 :** திருப்பலி மாலை 5.00 மணிக்கு நடைபெறும்.

**ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் :** காலை 8.00 மணிக்கு திருச்சிலுவைப்பாதை, அதனைத் தொடர்ந்து சிங்களம், தமிழ் மொழிகளில் திருப்பலி நடைபெறும்.

**பரிசுத்த வாரம் :**

| | |
|---|---|
| பங்குனி 29: | குருத்தோலை ஞாயிறு மு.ப 10.00 மணிக்கு திருப்பலி சிங்களம், தமிழ் மொழிகளில் நடைபெறும். |
| சித்திரை 02: | பெரிய வியாழக்கிழமை பி.ப 6.30 மணிக்கு திருப்பலி சிங்களம், தமிழ் மொழிகளில் நடைபெறும். |
| சித்திரை 03 : | பெரிய வெள்ளிக்கிழமை பொது சிலுவைப்பாதை பி.ப 1.30 மணிக்கு சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் நடைபெறுவதோடு திருச்சிலுவை முத்தி, பி.ப 3.00 மணிக்கு நடைபெறும். |
| சித்திரை 04 : | அல்லேலூயா சனிக்கிழமை பி.ப 7.00 மணிக்கு திருப்பலி சிங்களம், தமிழ் மொழிகளில் நடைபெறும். |
| சித்திரை 05 : | உயிர்ப்பு ஞாயிறு காலை 8.30 மணிக்கு திருப்பலி சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் நடைபெறும் |

*இந்த வழிபாடுகளில் மட்டுமன்றி தங்களுக்கு விரும்பிய நாட்களிலும், நேரங்களிலும் திருச்சிலுவைப்பாதையும் திருப்பலியும் ஒப்புக்கொடுக்க ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.*

### ஹொரனை கல்வாரி திருத்தலத்திற்கான பாதை ஒழுங்கு

**கொழும்பு - ஹொரனை பாதை (பேருந்து இல. 120)**

**இரத்தினப்புரி - ஹொரனை :** இரத்தினப்புரி - கிரிஅல்ல - இங்கிரிய - ஹொரனை - களேதண்டுகொட புனித மார்ட்டீன் டி போறஸ் தேவாலயம்.

**மாத்தறை ஹொரனை பாதை :** மாத்தறை - காலி - களுத்துறை - பானந்துறை - பண்டாரகம - பொக்குனுவிட்ட - களேதண்டுகொட புனித மார்ட்டீன் டி போறஸ் தேவாலயம்.

**தக்ஷித்த லங்கா அதிவேக பாதை ஊடாக**

கொட்டாவையில் இருந்து - கெலனிகம ஊடாக வெளியேறி - இரத்தினப்புரி வீதி - பொக்குனுவிட்ட - களேதண்டுகொட - புனித மார்ட்டீன் டி போறஸ் தேவாலயம்

**காலியில் இருந்து** கெலனிகம ஊடாக வெளியேறி - இரத்தினப்புரி வீதி - பொக்குனுவிட்ட - களேதண்டுகொட - புனித மார்ட்டீன் டி போறஸ் தேவாலயம்

**உங்கள் அனைவருக்கும், தூய ஆவியானவரால் நிரம்பப்பட்ட தவக்காலமும், பாஸ்கா காலமும் அமைய இறைவனை மன்றாடுகின்றேன்**

பங்குதந்தை மற்றும் பங்கு மக்கள்

❁ **உணவு தேவைகளுக்கு மற்றும் மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.** அருட்தந்தை ஒகஸ்டின் ரொஹான் அடிகள், தொ.பே. இல. 034-2261132, 072-9694877, (web : horanacatholicchurch.com)


# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்

- நவீன தொழிற்நுட்ப ரீதியில் (ஓப்செட் முறையில்)
- நவீன பிரதியாக்கம் (டுப்ளோ)
- வர்ண போட்டோ பிரதிகள் எடுத்தலும், ஸ்கேன் எடுத்தலும்,
- பலவர்ணங்களின் டுப்ளோ பிரதிகள் எடுத்தல்
- அடையாள அட்டைகள் தொடக்கம் A-3 அளவிலான லெமினேட்டிங் சேவைகள்




| | பின் பக்கம் | உற்பக்கம் |
|---|---|---|
| ஆலயத் திருவிழா (திருத்தப்பட்டுள்ளது)<br>¼ பக்கம்<br>½ பக்கம்<br>முழுப்பக்கம் | <br><br>7750/=<br>15500/=<br>31000/= | <br><br>7000/=<br>14000/=<br>28000/= |
| வர்த்தக விளம்பரம் (திருத்தப்பட்டுள்ளது)<br>¼ பக்கம்<br>½ பக்கம்<br>முழுப்பக்கம் | <br><br>11500/=<br>23000/=<br>46000/= | <br><br>10000/=<br>20000=<br>40000/= |

வர்ணம் + 25 %

## உங்களுக்கான பல விசேட சேவைகள்!

### கொழும்பு கத்தோலிக்க அச்சகம்

| | 1½" x 1" single | 3" x 1"Double | 5" x 1" Trible |
|---|---|---|---|
| 1" | 350/= | 700/= | 1050/= |
| 1½" | 525/= | 1050/= | 1575/= |
| 2" | 700/= | 1400/= | 2100/= |
| 2½" | 875/= | 1750/= | 2625/= |
| 3" | 1050/= | 2100/= | 3150/= |
| 3½" | 1225/= | 2450/= | 3675/= |
| 4" | 1400/= | 2800/= | 4200/= |
| 4½" | 1575/= | 3150/= | 4725/= |
| 5" | 1750/= | 3500/= | 5250/= |
| 5½" | 1925/= | 3850/= | 5775/= |
| 6" | 2100/= | 4200/= | 6300/= |

ஞான ஒளி பத்திரிகையின்

விளம்பரங்களுக்கான விலைப்பட்டியல்

| | பின் பக்கம் | உற்பக்கம் |
|---|---|---|
| ஆலயத் திருவிழா (திருத்தப்பட்டுள்ளது)<br>¼ பக்கம்<br>½ பக்கம்<br>முழுப்பக்கம் | <br><br>7750/=<br>15500/=<br>31000/= | <br><br>7000/=<br>14000/=<br>28000/= |
| வர்த்தக விளம்பரம் (திருத்தப்பட்டுள்ளது)<br>¼ பக்கம்<br>½ பக்கம்<br>முழுப்பக்கம் | <br><br>11500/=<br>23000/=<br>46000/= | <br><br>10000/=<br>20000=<br>40000/= |

வர்ணம் + 25 %

திருமண சேவைகளுக்கு
1 தொடக்கம் 15 சொற்கள் வரை
ரூபா 500.00உம் தொடர்ந்து வரும் ஒவ்வொரு
சொற்களுக்கும் ரூபா 8.00 வீதமும் அறவிடப்படும்.

### தொடர்புகொள்ளுங்கள்

இயக்குனர் அருட்தந்தை
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய
மாவத்தை கொழும்பு - 08.
தொ.பே இல. 0112695984, 0112678106, 0114614927 பெக்ஸ் - 0112692586
E-mail : colombocp@sltnet.lk
www.colombocatholicpress.com



அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை M.F. மகேந்திர D. குணதிலக்க,, இயக்குனர், கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்